# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

௩ புத். சஞ்சிகை ௨.] ௲௮௱௪௩ ௵. தை. ௨௬, தேதி வியாழக்கிழமை, Thursday, January 26, 1843. [Vol. III. No. 2.

## வீரமாமுனிவர் செய்த நூல்கள்.
### Works of Beschi.

முன் இவர் கோவில் கட்டுவித்த ஸ்தலமாகிய ஆரியனூர்ப் பெயரை நாட்டி உலகத்தில் அவதரித்த இரட்சகரைக் குறித்து மூவாயிரத்து நூற்றுப் பதினைந்து பாடல்களுள்ள முப்பத்தாறு படலமாக வகுத்துத் தேம்பாவணியென்னும் ஒரு வேத விவரண காப்பியத்தை ௲௭௱௨௰௬ம் வருடத்திலே பாடினார். அதிற் கவிகளின் திட்பத்தையும் கருத்தினுட்பத்தையும் கனவித்துவான்களுங் கண்டுணரமாட்டாமல் அதற்குரை செய்யவேண்டுமென்று வீரமாமுனிவருக்கு விண்ணப்பஞ் செய்ய (௲௭௱௨௰௯) வருடத்திலே அதற்குப் பதவுரையுஞ் செய்தார்.

வீரமாமுனிவர் பாடிய பெருங் காப்பியத்தைக் கண்டு வியந்த வித்துவான்களும் அவருடைய மாணாக்கர்களும் அவர் பாடிய பிரபந்தங்களுக்குக் குரு வணக்கஞ் சொல்லவேண்டுமென்று விரும்பி அவரதுமதிப்படி அந்நாள் வரைக்கும் அவருக்கு வழங்கி வந்த தைரியநாதசுவாமி என்கிற பேரில் தைரியத்திற்கு வீரமென்றும், காமாதிகளைக் கடந்தவராதலால் முனியென்றும் மா வென்பது பெருமையைக் குறித்த அடைமொழியாக முனியென்பதனோடு கூட்டி வீரமாமுனிவரெனக் காரணப்பெயரமைத்து வணக்கங் கூறலாயினார்கள். இதன்பின்பு வீரமாமுனிவர் இரண்டாமுறை கட்டின திருக்காவலூர்க் கோவிலிலிருக்கும் அடைக்கல நாயகியைக் குறித்துத் திருக்காவலூர்க் கலம்பகமும் அடைக்கலமாலையும் கலிவெண்பாவும் என்னும் மூன்று பிரபந்தங்களைப் பாடினார்.

போர்த்துக்கீசு தேசத்திற் பிறந்த கித்தேரியம்மாளின் சரித்திரத்தைப் பத்துறுப்பாகப் பிரித்து (௲௭௱௩௰௨) தொடையாகப் பாடினார். அது வெள்ளுரையாயினும் சித்திர அலங்காரமுஞ் சிறந்த மதுரமுந் தோன்றும். மேலும் கிறிஸ்துநாதருடைய பாடுகளின் மேல் கன்னிமை குன்றாதற்புதமாயீன்ற மரியாளின் பிரலாபத்தைக் குறித்து அன்னையழுங்கலந்தாதியும் இன்னும் அநேக கீர்த்தனங்களும் வண்ணங்களும் தேவாரங்களும் பாடினார். மிகவுந் தேர்ந்த வித்துவான்கள் தாமே இவர் பாடிய இசைத் தமிழ்ப் பிரபந்தங்களின் கட்டுரை அலங்காரத்தையுங் கருத்தினுட்பத்தையுங் கண்டு சிரமேற்கொண்டு களித்துப் புகழ்கின்றார்கள்.

வேதோபதேசம்பண்ண அனுப்பப்படும் உபதேசிகள் தங்கள் தொழிலினியல்பு மாட்சி முதலிய தன்மைகளைத் தெரிந்து பிறரையுங் கதியேற்றித் தாங்களுங் கரையேறும்படி வேதப் பிரமாணங்களை காட்டி அவை விளங்கத்தக்க நியாயங்களைக் காட்டி வேதியரொழுக்கமென்னும் வேதவிவரண சாஸ்திரத்தை இருபததிகாரமாக (௲௭௱௨௰௮) வருடத்தில் எழுதினார். மக்கட்காதகாரணமுமவதியும், முன்கூறிப்பாவத்தன்மையையும் இடங் காலஞ் செயல் முதலியவைகளைப் பற்றிப் பாவமெய்தும் பலவினையையும் அதிலுல வருந் தீங்கினையும் பின்கூறி மக்களெவர்க்கும் பொய்யாதெய்தும் சாவு, தீர்வை, நரகம், மோட்சமென்னுமிந்நான்கின்றன்மையை நாலுவகையாய் விளங்கக்காட்டி அவ்வருடத்திற்றானே ஞானவுணர்த்துதலென்றொரு ஞானநூல் எழுதினார்.

தரங்கம்பாடியார் தாங்கள் தமிழிற் றிருப்பின சுவிசேஷத்தை ஒரு செட்டிக்காரன் கையிற் கொடுத்து வீரமாமுனிவர் இருக்கும் ஊரிற்போய் உபதேசம்பண்ணிக் கிறிஸ்து மார்க்கத்தைப் பிரபலம்பண்ண அவனை அனுப்பினார்கள். அவனும் அங்கங்கே திரிந்து வீரமாமுனிவர் இருக்கும் ஊரிலும் வந்து சில மனிதரைத் திருப்பப் பிரயாசப்படுவதைக் கண்ட சில கற்றோர் வீரமாமுனிவரிடத்திற் சென்று விண்ணப்பஞ் செய்துகொண்டதின்மேல் பாப்பு மதத்தை மெய்ப்படுத்துதற்குத் தரங்கம்பாடியார் போதித்து வந்த போதனை மித்தியமென்று காட்டுதற்கும் அவர்கள் தமிழிலே திருப்பி வைத்திருந்த சுவிசேஷத்திலே தப்பிதங்கள் இருக்கின்றனவென்று உதாரணப்படுத்துதற்கும் ௲௭௱௨௰௮ம் ஆண்டில் வேதவிளக்கமென்றொரு புத்தகத்தைப் பதினெட்டதிகாரமாக எழுதித் தரங்கம்பாடியாருக்கனுப்பினார். குறிக்கப்பட்ட இந்தப் பிரபந்தத்தினாலாவது வேறெந்த யுத்தி நியாயத்தினாலாவது பாப்பு மதந் தேவனருளிய வேதத்திற்கு இணங்குமென்று காட்டுவதரிது.

வீரமாமுனிவர் மேற் சொன்ன வேதவிவரணப் பிரபந்தங்களெல்லாம் முக்கியமாய் இந்துக் கிறிஸ்தவர்களுக்கு உபயோகமாகச் செய்ததுமல்லாமல் இந்துக்களுக்கெல்லாம் பொதுப் பிரயோசனமாய்த் தமிழ்ப்பாஷைக்கு வேண்டின தெளிவானவிலக்கணமும் அகராதியுஞ் செய்தார். அதெப்படியெனில், தமிழிலே முன்னோர் செய்த இலக்கணநூல்களெல்லாம் செந்தமிழ் மொழிகளிற் சிறப்பித் தெழுதியிருக்கின்றமையால் தமிழிலக்கணத்தைச் சிலர் மாத்திரம் படிக்கிறார்களென்பதையும் படிப்பவர்க்கு இருக்கிற பிரயாசத்தையும் வீரமாமுனிவர் கண்டு அதை யாவரும் விரும்பி எளிதிற் படிக்கும்பொருட்டு ௲௭௱௩௰ம் ஆண்டில் முன் செந்தமிழ் மொழியிலிருந்த இலக்கணத்தை வெளிப்படையாக எழுதி அதற்குத் தொன்னூல் விளக்கமென்று பேரிட்டார். ஆயினும் முன்னோர் தந்த நூல்களுக்கு இது அதிகமாய் விரித்துபோகாமலும் முக்கியமாய்வேண்டிய விதிகளெல்லாவற்றையும் உடைத்தாய்ச் செய்யப்பட்டது. தமிழ்ப் பாஷைக்கு முற்காலத்திற்றெளிவான அகராதியின்றிப் பாவும்பாவினமுமாகவுஞ் சூத்திரயாகவுமுள்ள நிகண்டுகள் மாத்திரம் இருந்தன. வீரமாமுனிவர் அவைகளை எல்லாஞ் சேர்த்து பெயர், பொருள், தொகை, தொடையென நான்காக வகுத்து ௲௭௱௩௰௨ம் ஆண்டிலொரு அகராதி செய்து அதற்குச் சதுரகராதியென்று பேரிட்டார்.

வாக்கியசித்தாந்த வகையை விளக்கு நிதிகணிதமென்றும் திருக்கணிதமென்றும் இருவகுப்பாகவும் இவற்றின் பிரிவுகளைப் பலவகுப்பாகவும் வகுத்து திருச்சபைக்கணிதமென்றொரு சோதிட நூல செய்தார். இந்தியருக்குப் பொதுப் பிரயோசனமாகச் செய்த மேற்சொன்ன நூல்களன்றி ஐரோப்பியருக்கும் விசேஷமாய் ஐரோப்பாவிலிருந்து வருங் குருக்களுக்கும் பொதுவலமாகச் செந்தமிழென்றுங் கொடுந் தமிழென்றும இருவகையாய் வழங்கும் தமிழ்ப் பாஷையை அவர்கள் எளிதிற் கற்கும்படி இருவகை இலக்கணங்களையும் அகராதிகளையும லத்தீன் பாஷையிலே மொழிபெயர்த்து எழுதிப் பரப்பினார். அதெப்படியெனில் இலக்கணமில்லாததாயினும் கற்றோராலுமற்றோராலுஞ் சாதாரணமாய் வழங்கப்படும கொடுந் தமிழுக்கிலக்கணங் கற்பித்து அதை ௲௭௱௨௰௮ம் ஆண்டில் லத்தீன்பாஷையில் மொழிபெயர்த்து ௲௭௱௩௰ம ஆண்டிலே தரங்கம்பாடியிலே அச்சுப்படுத்தினார். மீளவும் ௲௭௱௩௰ம் ஆண்டு செந்தமிழுக்கு எழுத்துச்சொல் யாப்பு என்னும் இம மூன்றையும் சேர்த்து அதற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும் அதன் பின் அவர் தமிழில உண்டுபண்ணின ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கத்தை லத்தீன் பாஷையிலே வியாக்கியானமபண்ணின மொழிபெயர்ப்பும் கொடுந் தமிழுக்கும் லத்தீனுக்கும் அகராதியும் போர்த்துக்கீசு பாஷையையும் லத்தீன் பாஷையையுஞ் சேர்த்துத் தமிழிலே மொழிபெயர்த்த மற்றொரு அகராதியும் கொடுந் தமிழ் வாசிப்பவர்களுக்குப் பரமார்த்த குருவின் கதையும் அதற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும் செந்தமிழ் வாசிப்பவர்களுக்கு வாமன் சரித்திரமும அதற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும் வாக்கிய சித்தாந்த கணிதத்திற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும் தெலுங்குப்பாஷைக்கு லத்தீனில வியாகரணமுஞ்செய்தார். இவையல்லாமல் திருவள்ளுவர் குறளை லத்தீன்பாஷையிலே மொழிபெயர்த்து வியாக்கியானமபண்ணினார் அந்நூலகப்படவில்லை. மேலும அவரால் செய்யப்பட்டனவாகக் கேள்விப்பட்டுக் கிடையாத நூல்கள் இன்னுஞ் சிலவுளவாம.

## வீரமாமுனிவரைக் குறித்துச் சொல்லப்பட்ட விசேஷங்கள்.
### Anecdotes related of Beschi.

வீரமாமுனிவர் பற்பல கலைக்கியானங்களைப் படித்து வெகு சாத்திரங்களை ஆராய்ந்தறிந்து அதிக கீர்த்தி பெற்றவரானதனையால் அவர் இருந்த காலத்திலே சம்பவித்தனவாக அநேக அ

Digitized by Google

தன காரியங்கள் அவரைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில், சில சமுச்சயமுள்ளவைகளாயிருந்தாலும் ஆனாற் சில உண்மையாய் நடந்திருக்கவுங்கூடும்.

நன்றாய்க் கற்றறிந்த இரண்டு சடைப் பண்டாரங்கள் வாயாற் பேசியாவதில்லையென்று நினைத்துக் கையாற் பேசுஞ் சாடைகாண்பித்து வீரமாமுனிவரை வெல்லவேண்டுமென்று அவரிடத்துக்கு வந்து உபசாரஞ்செய்துகொண்டதின்பின் அவரை நோக்கி உம்முடன் வாயினாற் பேசவேண்டியவைகளைக் கைச்சாடையிற் பேசவேண்டுமென, இவரும் சம்மதித்து என்ன பேசவேண்டுமென்று கைச்சாடையிற் கேட்க, அவ்விருவரும் இரண்டு விரலைக் காண்பித்தால் நாம் இருவர் வந்தோமென்று நினைப்பார் அதினாலே மூடனஞ்செய்யலாமென்று நினைத்து அவ்விருவரிலொருவன் இரண்டு விரலைநீட்டிக்காட்ட அப்பொழுது வானம் பூமி, சந்திரன் சூரியன், ஆண்பெண், தாய் தந்தை, மோட்சநரகம், மெய்க் குரு பொய்க் குரு, நல்வினைதீவினை, மித்துருசத்துரு, அழுதல் சிரித்தல், சாவு வாழ்வு, தூங்கல் விழித்தல், மூடல் திறத்தல், இப்படி இரண்டிரண்டாக அநேகங்களை நினைத்துத் தமதொரு விரலை நீட்டிக் காட்டிக் கையோடுகை அறைந்தார். அவர்கள் அதைக் கண்டு கலங்கிப் பூலோகபரலோகமெல்லாவற்றையும் சப்தசாகரத்தையும் தாபரசங்கம முதலானவற்றையும் படைத்தளித்தவரொருவரெனத் தெளிந்து கையோடுகை அறைந்து காட்டின விபரந் தெரியாமல் மயங்கி நியாயந் தெரியச் செய்யவேண்டுமென்று வாயினாற் கேட்கச் சகலத்தையும் உண்டுபண்ணினவர் ஒருவர் தவிர மற்றவை எல்லாம் பொய்வாழ்வென்ற குறிப்பென்று சொல்லக் கேட்டு மறுமொழி சொல்லாமற் போய்விட்டார்கள்.

இதன் பின்பு கல்விப் பெருக்கத்தால் மிகுந்த ஒன்பது சடைப் பண்டாரங்கள் வந்து வீரமாமுனிவரோடு தருக்கம்பண்ணி அவரை வெல்லவேண்டுமென்று கருதித் தோற்றவர்கள் வெற்றிபெற்றவர்கள் சொற்படி நடப்பதென்று உடம்படிக்கை பண்ணிக்கொண்டு தர்க்கிக்கத் தலைப்பட்டார்கள். ஒரு மாசமளவும் பண்ணின தருக்கத்தில் அவரை வெல்லமாட்டாமல் தாங்களே தோற்றபடியால் அவர்களில் ஆறுபேர் சத்தியவேதத்துக்குட்பட்டார்கள், மற்ற மூன்றுபேருஞ் சடைகள் அறுபட்டு வெட்கத்தினால் மேற்குச் சீமைக்குப் போய்விட்டார்கள். அச்சடைகள் திருக்காவலூர்க் கோவில மண்டபத்தில் வைக்கோற் கட்டுப்போல ஐதர் கலாபமட்டுந் தொங்கிக்கிடந்தன.

இப்படி இவர் தேச சஞ்சாரம்பண்ணிக்கொண்டுபோகிறபொழுது, சிவச்சேத்திரமாகிய வைத்திசுரன் கோவிலில வந்து இறங்கியிருந்து சீஷர்கள் கற்றுச் சொல்லிகளுடனே வெளியே உலாத்தப் புறப்பட்டு வினைதீர்த்தான் கோவில அருகாக வருகிறபோது அந்தக் கோவில் வெகு ஆடம்பரமாய் இருக்கிறதைக் கண்டு, அந்தக் கோவிலுக்கு வந்திருந்தவர்களிற் சில யோக்கியர்களைக் கண்டு இந்தக் கோவில என்ன கோவில் என்று கேட்டார். அவர்கள் வினைதீர்த்தான் கோவில்; கூன், குருடர், முடவர் முதலாகிய பிணியாளிகள் வந்து வழிபட்டால் அந்த வினைகளெல்லாஞ் சூரியனைக் கண்ட இருள்போல நீங்குமென்று உறுதியாகச் சொன்னார்கள்.

வெண்பா

வாதக்காலாந் தனக்கு மைத்துனற்கு நீரழிவாம்
போதப்பெருவயிறாம் புத்திரற்கு - மாதரையில்
வந்தவினைதீர்க்க மருந்தறியாவேளூரன்
எந்தவினைதீர்த்தானிவன்.

இதன் பொருள்.

வேளூரராகிய வைத்தியநாத சுவாமியானவர் தமக்கொருகால்வாதமாம்; தமது மைத்துனனாகிய விட்டுணுவுக்குநீரழிவாம்; தமது பிள்ளைக்கு மிகவும் பெருவயிறாம். இப்படித் தங்களுக்கு வந்த வியாதியைப் போக்க ஒளஷதந்தெரியாதவர் பூவுலகத்தில எந்த வினை தீர்த்தாரென்றவாறு. சிவன் காளியுடன் வாதிட்டாடினபொழுது ஒரு காலைத்தூக்கி ஆடினராதலால வாதக்காலென்றும், விட்டுணுவுக்குப் பாதத்திற் கங்கையுற்பத்தியாதலால் நீரழிவென்றும, புத்திரருக்கு இயல்பாகவே பெரியவயிறாதலால் பெருவயிறென்றும் சாதுரியமாய்ப் பிரசங்கம்பண்ணுகையில் அதைக் கேட்டிருந்த சைவரெல்லாருந் திகைத்து நின்று இவர் மேற் சந்தோஷித்தார்கள். இவருடைய உபதேச மகிமையினால் இந்துதேசத்தவர்களிற் சிலர் கிறிஸ்தவர்களானார்கள்.

வீரமாமுனிவர் சந்தாசாய்பென்னும் நபாபின்கீழமைந்து லௌகீக உத்தியோகத்தைப் பெற்றபின் தமிழ்க் கலைக்கியானவாராய்ச்சியிலுங் கவி பாடுந் திறமையிலும் மிகுந்த முயற்சியுடையவராயிருந்ததுமன்றி வைதிக காரியங்களையுஞ் சிந்தித்து "உலகைக் காத்தலும் பிறரை உணர்த்தலுஞ் செய்து வீடுபெறுவாய்" என்ற கருத்தையுடைய தெய்வ வசனப்படி அவர் தமதான்மாவையும் பிறரான்மாக்களையும் உலகபாசசேனுமலைகடலினின்று கரையேற்றும்பொருட்டு இராப்பகல் பிரயத்தனம்பண்ணி வேதத்தைப் போதித்துப் பிரசங்கித்துக்கொண்டிருந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது.

## வீரமாமுனிவரது தேகவியோகம்.

## Death of Beschi.

முடிவில் இவர் சந்தாசாய்புக்குத்திபாலுகித் திருச்சிராப்பள்ளியில் ௲௭௱௪௰ம் வருடத்தில் நாதாசிங்கு பாளையம வந்து முற்றுக்கைபோட்டுக்கொண்டிருந்து திருச்சிராப்பள்ளியைப் பிடிக்க எத்தனமாயிருக்கிற போது இவர் வெளிப்பட்டு உலாந்தாக்காரருடைய காயற்பட்டினத்துக்கு அடுத்த மணற்பாடு என்னும் ஊருக்குப்போய் அங்குள்ள யேசு சபை மண்டலத்தில இரண்டு வருஷக் காலம் முதிர்ந்த வயசினராயினும் உயர்ந்த மனமுயற்சியோடு அங்கங்கே வேதோபதேசம் பண்ணிக்கொண்டும தாம பாடிய பெருங் காப்பிய முதலியவற்றைப் பிரசங்கித்துக்கொண்டும் இருந்தார். பிறரைப் பரலோகத்திற் சேர்க்கவருந்திய சிவகாருண்ணியராகிய வீரமாமுனிவர் ௲௭௱௪௨ம் ஆண்டிற் பரலோகப்பிராப்தியானார்.

## முடிவுரை.

“போர்ச்சேவகம்பண்ணுகிற எவனும் தன்னைச் சேவகம் எழுதிக்கொண்டவனுக்குப் பிரியமாயிருக்கும்படிக்கு இச்சீவனுக்கேற்ற (வேறு) தொழில்களிற் சிக்கிக்கொள்ளமாட்டானே.” என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருப்பதினால் குருப்பட்டந் தரித்தவர்கள் வைதிக காரியங்களைச் சிந்தைபண்ணு முயற்சியுடனே திருச்சபையாருக்குத் தொண்டுசெய்வதே ஒழிய லௌகீக காரியங்களில் அழுந்தியிருக்கக்கூடாதென்பதை யாவரும் அறிந்துகொள்ளலாம். ஆகையால் வீரமாமுனிவர் திவானுத்தியோகத்தைப் பெற்றிருந்தது அவருக்கொரு மகிமையல்ல.

அல்லாமலும சருவலோகரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவானவரும் அவருடைய அப்போஸ்தலரும் உலகாடம்பரங்களை நீக்கி அலங்கார சமபந்தங்களைத் தள்ளித் தாழ்மையோடு குரு உத்தியோகத்தை நடப்பித்ததுபோல எக்காலத்திலுமுள்ள எல்லாக் குருக்கள்மாரும் அத்தன்மையாய் அத்தொழிலை நடப்பிக்கத்தகுமே? இதனிமித்தம இந்துக் குருக்கள்மாரைப் போல அலங்காரத்துடனிருப்பது நாம நினைக்கிறபடி வீரமாமுனிவருக்குத் தகாது. வஸ்திராதிகளிலும போசனப்பதார்த்தங்களிலும இத்தேசாசாரத்தை அநுசரித்துக்கொள்வது அவருக்கு மாத்திரமோ? இத்தேசத்தில வந்திருக்கும எவர்களுக்குந் தகுமே.

இதுநிற்க வீரமாமுனிவர் சென்ம தேசத்தில இருக்கையில் எபிரேயு கிரேக்கு லத்தீன், போர்த்துக்கேசு முதலிய அந்நிய பாஷைகளில தேர்ந்த பாண்டித்தியமுள்ளவராயிருந்து இத்தேசத்திற்கு வந்தபின் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளையும் அவற்றின் இலக்கண இலக்கியங்களையும ஐயந்திரிபின்றிக் கற்றுணர்ந்தவராதலால சற்றேனுமாலசியமின்றித் தாம் நினைத்துவந்த காரியத்தை மாத்திரம நிறைவேற்றுதற்கான அபேட்சையுடன் காலயாபனமபண்ணியிருந்த சாக்கியதையுமுள்ளவராயிருந்தாரென்று மட்டுக்கட்டலாம. அல்லாமலும அறிவில்லாதவர்களுக்குணர்த்தும் வேத விவரண பிரபந்தங்களையும அறிவுள்ளவர்களுடைய சமுச்சயத்தைச் சேதனம்பண்ணும பஞ்சஇலக்கணங்களை விளக்கும அரிய நூல்களையும வித்தியாபாரகரானவர்களுக்கும் மனரம்மியத்தைத் தரும பாவிஸசித்திரப்பாமாலைகளையுஞ் செய்தவராயிருப்பதினால அவர் இயல்பாகவே சிரேஷ்டகுணராகிய ஒரு மகாத்துமாவாயிருந்தாரென்று நாம நிச்சயித்துக்கொள்ளலாம.

(வீரமாமுனிவர் சரித்திர சமாப்தம்.)

Digitized by Google

௬. பாவத்தில்விழுந்து தங்கள் நிருவாணத்தை அறிந்ததினு அத்தை மூடும்படி இலைகளை எடுத்துத் தைத்தார்கள்.

௭. பராபரன் அவர்களை நியாயவிசாரணைக்குட்டாக்கிக் கொஞ்சக் காலமளவும் வேலைசெய்து வருத்தப்பட்டு அதன்பின் இறக்கும்படி தீர்ப்புப்பண்ணினார்.

௮ பசாசுக்குச் சாபம் வருமென்றுரைக்கப்பட்டது.

௯. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நல்லாகாரமான ஒரு புத்திரன் பிறந்தான்.

(இது காரியத்தைப்பற்றித் தலாம்பரமாயறியவேண்டுகில், மோசே எழுதின உற்பத்தியாகாண்டம் முதலாம இரண்டாம் அதிகாரங்களை வாசித்துப்பாருங்கள்.)

## ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

Chap. vi.] *Sympathy and Fascination.* [Part II.

6. The power possessed by some of the class of fishes, particularly the torpedo and electric eels is also inexplicable to us. These animals have the power, on being touched with the hand, or even with a stick, of rendering the hand and limb of the person who touches them numb, and, as it were, lifeless.

7. An electric eel was lately exhibited at Paris; a doctor present, was foolish enough to seize the creature with both hands. It gave him such severe shocks that he leaped about and screamed violently, and then fell into convulsions. He could not shake the eel from his grasp, till his hands were plunged into water, when it dropped off. The doctor was ill for a long time, and doubtless resolved never to touch another electric eel.

8. There are tribes of men, who possess a power of fascinating serpents and scorpions. Some have this power naturally, others acquire it by means of using certain herbs. The race of serpent-catchers in Africa have, naturally, power over the most venomous of these reptiles. Bruce, the traveller, asserts that he has seen these men seize poisonous serpents, and eat them up alive, from tail to head like a carrot; while the snakes seemed torpid and unable to bite or defend themselves in any way. This charm or fascination is to us entirely unaccountable.

9. But snakes can fascinate in their turn. The rattlesnake, in particular, is famous for this power. It is said the rattlesnake will fix its eyes intently on a bird or squirrel, and the poor little animals thus charmed have no power to move away, but keep drawing nearer and nearer the serpent, and at last enter into his mouth, which has all the time been open to receive them, and are instantly devoured.

10. Some philosophers account for this fascinating power, by supposing the serpents secrete a vapor or peculiar ordor, which they can throw around them to a certain distance at pleasure. This vapor acts on the nerves of animals which approach within its range, and renders them stupid, or rather intoxicated; just as men can charm trout and other fresh water fishes by rubbing the hand with assafœtida, and holding it in the water.

11. But after all our attempts to examine the Book of Nature, we must not expect to understand its mysteries. Man cannot know either the beginning or the end or the final destination of any thing that is created; he can only observe what exists, and the conditions under which it exists, and the order and regularity of its nature and life God only can know all things.

[Translation of the foregoing.]

## கூட்டேன்பவர்செய்த பிரபஞ்சநூல்.

௬. அதிகாரம்.—௨ம். பிரிவு.

உபவுணர்ச்சி—மருட்டியல்.

௬. மின்சாரமலங்குக்குத் தோர்பிடர் என்று சொல்லப்படும் இடிமீன்களிற் சிலதுக்குமுள்ள இயல்பின்னதென எமக்கு விளங்காது. இவ்வகைக்கொத்த மிருகங்களைக் கரத்தினாலே அல்லது ஒரு தடியினாற்றொடும்பொழுது அப்படித் தொட்டவனுடைய கரத்தையும் அவயவத்தையும் விறைப்புக்கொள்ளப்பண்ணிச் சொல்லப்போனால் அவைகளினுயிரில்லையென்றுந் தீர்க்கப்பண்ணுகுது.

௭. கொஞ்சநாளைக்கு முன்னே பாரிஸ்தேயத்திலே ஒரு மின்சாரமலங்குமீன் பாவனை காட்டப்பட்டது. அப்பொழுது அங்கனமிருந்த ஒரு வைத்தியன் தனதிருகையினாலும் அந்தப் பிராணியைத்தொட்டவுடனே அது அவருக்கு வாறுபிடித்ததினால் அவர் பாய்ந்துவிழுந்து திடீரென்று கூவென்னக்கடைசியாய் அவருக்கு வலிவந்தது. அவர் அந்த மலங்கிற் பிடித்த பிடியைத் தண்ணீருக்குள்ளே பிடித்து அது அவருடைய கையை விட்டுவிடுமளவும் அவர் அதை ஆட்டியலைக்கக் கூடாமற்போயிற்று. அவ்வைத்தியன் வெகுகாலமாகத் துன்பமாயிருந்தார். அதின் பிறகு சந்தேகமில்லாமல் அப்படிப்பட்ட வேறொரு மின்சாரமலங்கைக் கரத்தினாற்றொடுகிறதற்கெண்ணவில்லைப்போலும்.

௮. சருப்பங்களையுந் தேட்களையும் மருட்டத்தக்க இயல்பினையுடைய சிலவருணத்தவர்களுண்டு. இவ்வியல்பு சிலருக்கியல்பாயுண்டானது வேறு சிலருக்குச் சிலபலவிதமான பூண்டு வருக்கங்களைப் பிரயோகிக்கிறதினால இவ்வித இயல்பையடைந்துகொள்ளுகிறார்கள். ஆபிரிக்காவிலுள்ள பாம்பு பிடிக்கும் வருணத்தவர்களியல்பாய் இவ்வகைப்பட்ட நஞ்சுள்ள ஊரகங்களுக்கு மேலாக வல்லமையைக்கொண்டிருக்கிறார்கள். வழிச்செலவ்வாளுகிய புரூசென்பவர் இவ்வகையான மனிதர் விடமுள்ள பாம்புகளைப் பிடித்துக் கேரேற்றென்கிற கிழங்குகளை விழுங்குகிறதுபோல வால்தொடுத்துத் தலையளவுக்கும் உயிரோடே தின்றுவிடுகிறார்கள். அவ்வேளையில் அந்தச் சருப்பங்களியக்கமின்றிக் கிடந்து கடிக்கவியலபிலலாமலும் எவ்விதத்திலும் தங்களைக் காத்துக்கொள்ள வல்லமையிலலாமலுமிருக்கின்றன. இவ்வசியத்தின் காரணம் யாதென நமக்குக் கொஞ்சமென்கிலுந் தெரியாது.

௯. ஆனாலும் பாம்புமவ்விதமாக மருட்டக்கூடியதாயிருக்கின்றது. பிரதானமாய், கடகடென்று சத்தமிடும் ஊற்றில் என்ற சருப்பம் இப்படி மயக்குமியல்பிலேசந்தித்ததாயிருக்கின்றது. இவ்வகையான பாம்புகள் யாதொரு பட்சியை அல்லது அணிலைக் குறிவைத்துக் கவனமாய்ப் பார்க்கும்பொழுது அந்தப் பட்சி அல்லது அணில் இங்குமங்கும் அசையாமல அப்படி மயக்கும் பாம்புக்குக் கிட்டக் கிட்ட அணுகச்சென்று கடைசியாக ஆவென்றிருக்கும் வாய்க்குள்ளே போய்விட அது தின்றுவிடும்.

௰. பாம்புகள் தங்களுக்கிட்டமான வேளை கொஞ்சத்தூரத்துக்கு ஒரு விதமான ஆவியைப் பரப்புகிறதினால இவ்வித மருட்டியல அவைகளுக்குண்டாகுதென்று சில நூலாக்கியோர் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆவி தனக்கெட்டத்தக்க இடத்திலுள்ள மிருகத்தின் நரம்பிலதாக்கி அம்மிருகத்தைமந்தமாக்கி அல்லது துயராட்டங்கொள்ளப்பண்ணுகின்றது. அப்படியே மனிதர் பெருங்காயத்தைக் கையிலே தடவித் தண்ணீருக்குள்ளே பிடித்து நிறவுற்று முதலிய மீன்வகைகளை மருட்டிப்பிடிக்கிறார்கள்.

௰௧. ஆனாலும் பிரபஞ்சநூலை நாங்கள் எவ்வளவாயாய்ந்து பார்த்தாலும அதின் ஞானகுட்சத்தை விளங்கிக்கொள்வோமென்று நாங்கள் காத்திருக்க நியாயமில்லை: படைக்கப்பட்ட யாதொரு பொருளினுற்பத்தியையாகுதல் அதின் நியமத்தையாகுதல மனிதன் அறியக்கூடாது. ஆனாலும அவை சீவிக்குந்தன்மையும், அப்படிச்சீவிக்குதவினிலைமையையும அதனியல்பையுஞ்சீவனையும் மயன்றி வேறொன்றையும் மனிதன அறியமாட்டான், பராபரன மாத்திரமே அனைத்தையும அறியக்கூடும்.

## ABBOTT'S LESSONS ON MORALS.

(Adapted to Hindu Readers.)

*Lesson I.*—Conscience. (Continued.)

Conscience *remonstrates* while we are doing wrong. Do you know what *remonstrates* means? Suppose some

Digitized by Google

children, playing in a garden, were to go to a tree, and get some mango fruits which were not ripe, and which their father had forbidden them to take; and suppose that one of the children, more obedient than the rest, should stand by and say, "You had better not to take these mangoes: it is wrong: you ought not to do it; you ought not to disobey father." This would be *remonstrating*. Now, conscience always remonstrates when we are doing any thing wrong. We feel uneasy and unhappy while we are doing it; and we cannot help thinking, all the time, that it is wrong, and that we ought not to do it. This is *conscience*, remonstrating with us, and endeavouring to keep us from sin.

Conscience *reproaches* us after we have done wrong, and makes us anxious, unhappy, and afraid. We are afraid that some body saw us, or will, in some way, find out the wrong we have done. We are unhappy. We cannot help thinking of the sin, though we try to forget it. When we are alone, conscience reproaches us; it reminds us of our guilt, and we feel ashamed and wretched. We are afraid, too. We dare not be alone. We know that we have offended God, and committed wickedness, and our hearts sink with fear. O, how much better would it be for us always to do right, than thus to wound conscience and load our hearts with anxiety and suffering. But there is one thing more to be said of conscience. It is this:

Conscience becomes quiet again when we confess the wrong that we have done, and resolve to do so no more. It is probable that the principal reason why God has given us conscience, is to prevent our doing wrong; and so when we cease to do wrong, it generally ceases to give us pain. If a person is only intending to do something wrong, but has not yet begun to do it, and his conscience is warning him, and making him feel restless and uneasy, he can very easily quiet its warnings, and obtain peace of mind again. And how? why, simply by giving up his design of doing wrong, and determining to do right. If he has already done wrong, and injured any one by it,—then if he will determine to do so no more, and confess his fault, and make reparation for the injury, if he can,—then he will be happy again.

A boy named Ramalingam found a small piece of money in his mother's chest. He took it, and determined to keep it himself. He thought that, if his father should ask him where he got it, he could tell him that he found it. "For," said he to himself, "I did find it in the chest." His father did ask him, when he saw him playing with the money; and he told him, according to the plan which he had formed, that he found it. He felt guilty when he took the money. He felt still more guilty when he told his father that he found it. Then his father asked him where he found it. Ramalingam had not expected this question. He was confounded. He answered suddenly, "*in the street*." His father wondered who could have lost it, but he said no more, and so Ramalingam escaped detection.

But, though he was pleased to find that he was not detected, his sense of guilt made him miserable. Every time that he felt the money, the touch of it seemed to arouse conscience to reproach him. Now, if he had gone at once and returned the money to his father, and confessed that he did not find it in the street, but that he took it from his mother's chest he would have been happy again. Instead of that, he went and bought cakes with the money. Some of the cakes he ate himself, and the rest he gave to the boys. Thus he fixed the feelings of guilt and wretchedness in his mind; he made conscience his enemy, and prepared himself to commit greater crimes.

### Questions on Lesson 1.

Does conscience reprove children *while they are doing* what is wrong?
Does it continue to reprove them after they have done what is wrong?
Is there any way of regaining peace of mind after we have thus lost it?
What is the way?
Relate the story of Ramalingam?
Did he at first intend to tell an absolute falsehood?
Did he intend to deceive his father?
Did he in the end tell an absolute falsehood?
What did he gain by these sins?
What did he lose?
How might he have recovered his peace and happiness?
Did he do so?

---

## நன்மார்க்கநேறி.

### சீவசாட்சி, அல்லது மனச்சாட்சி.

சீவசாட்சியானது நாங்கள் தப்பிதமானவைகளைச் செய்யும்பொழுது தடுத்துப் பயமுறுத்துறுத்துகுது. தடுத்துப் பயமுறுத்துறுத்தலென்றதின் கருத்து உங்களுக்கு வெளிக்குதோ? தோட்டத்தில் விளையாடிக்கொண்டு நிற்கிற சில பிள்ளைகள் ஒரு மரத்துக்குக் கிட்டப்போய்த் தகப்பன் பிடுங்கவேண்டாமென்று சொன்ன சில மாங்காய்களைப் பிடுங்கினார்களென்று வைத்துக்கொள்ளுங்கள், அந்தப் பிள்ளைகளிலே சற்றே கீழ்ப்படியுங் குணத்தினையுடைய ஒரு பிள்ளையானவன் கிட்ட நின்று "நீங்கள் இந்த மாம்பழத்தைப் பிடுங்காமல் விடுவது நலம், அப்படிப் பிடுங்குவது தப்பிதம். அப்படிச் செய்யக்கூடாது. நீங்கள் பிதாக் கொடுத்த கட்டளையை மீறக்கூடாது" என்று சொல்லுகிறானென்றும் வைத்துக்கொள்ளுங்கள். இப்படிச் சொன்ன சொல்லை தடுத்துப் பயமுறுத்துறுத்தலாயிருக்கின்றது. நாங்கள் தப்பிதமானவைகளைச் செய்யும்பொழுது சீவசாட்சியானது பயமுறுத்துறுத்துகுது, நாங்கள் அப்படிச் செய்யும்பொழுது சஞ்சலமுள்ளவர்களாயும் மனநோவுள்ளவர்களாயும் சீவிக்கிறோமென்றுணருகிறோம். அது தப்பிதந்தானென்றும் அதை நாங்கள் செய்யப்படாதென்றும் நாள் முழுதும் உணராமலே இருக்கக்கூடாது. சீவசாட்சி எங்களை விலக்கிப் பயமுறுத்திப் பாவஞ்செய்யாதிருக்கப்பண்ணுகுது.

நாங்கள் தப்பிதஞ் செய்தவுடனே சீவசாட்சி எங்களைக் கண்டித்து எங்களை அபாக்கியராகவும் கவலையுள்ளவர்களாகவும் பயம் நிறைந்தவர்களாகவும் வரப்பண்ணுகுது. நாம் தப்பிதத்தைச் செய்யும்பொழுது, சிலர் எங்களைக் கண்டார்களென்றுஞ் செய்த தப்பிதத்தை எப்படியோ காண்பார்களென்றுமெண்ணித் திகிலடைந்து அபாக்கியராயிருக்கிறோம். நாம் செய்த பாவத்தை மறந்துவிடத் தெண்டித்தாலும் அதை நினையாமலே இருந்துகொள்ளக்கூடாது. நாம் தனியே இருக்கும்பொழுது சீவசாட்சி நம்மைக் கண்டிக்குது. அது எமது குற்றத்தைப் பற்றி உணரப்பண்ணுகிறது. அப்பொழுது நாம் வெட்கமடைந்து அபாக்கியராயிருக்கிறோம். நாங்கள் திகிலடைகிறோம். நாம் தனியே இருக்க எண்ணுகிறதில்லை. நாம் பராபரனைக் கோபப்படுத்தி அவருக்கு விரோதமாகப் பொல்லாப்பைச் செய்தோமென்று உணரும்பொழுது எங்கள் இருதயந் திகிலால் அமிழ்ந்துப்போகின்றன. இவ்விதமாய் எங்கள் மனச்சாட்சியைக் காயப்படுத்திக் கவலை இக்கட்டு என்னுஞ் சுமைகளை எங்கள் இருதயத்திற் போடுவதைப் பார்க்கிலும் நிதார்த்தமானவற்றைச் செய்வது எவ்வளவு சந்தோஷசௌக்கியம்! சீவசாட்சியைப் பற்றி வேறுமொரு காரியம் உண்டு. என்னவானால்,

நாம் செய்த பாவத்தை அறிக்கையிட்டு இனி ஒருக்காலும் இவ்விதமாய்ச் செய்யோமென்று வாக்குத்தத்தம்பண்ணும்பொழுது சீவசாட்சியானது மறுபடியும் அமைதியாய்க் கவலையில்லாமல் இருக்கின்றது. ஒரு வேளை பராபரன் எமக்கு மனச்சாட்சியை

Digitized by Google

த் தந்தது இப்படிப்பட்ட பொல்லாங்கினின்றெங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்காயிருக்கும். அப்படியேநாம் பொல்லாப்பை விலக்கும்பொழுது அது பெரும்பாலும் எங்கள் கவலை வருத்தங்களைத் தவிர்க்கிறது. ஒருவன் பொல்லாப்புச்செய்ய உத்தேசித்து அத்தைச் செய்ய ஆரம்பியாமல் விட்டு அவனுடைய மனச்சாட்சி அவனை எச்சரித்து அவனுறுதலற்றவனாய் வரும்படி பண்ணும்பொழுது அவன் அந்தப் புத்திகளைக் கேட்டுச் சமாதானத்தை மறுபடியடைந்துகொள்வான். எப்படி அடைந்துகொள்வான்? எப்படியெனில், அவன் செய்ய உன்னின எண்ணத்தை விட்டுவிடுவதினாலேயும் இனிமேல் தப்பிதஞ் செய்யமாட்டேனென்று நிருணயம்பண்ணினதினாலேயும் சமாதானத்தை அடைந்துகொள்வான். அவன் தப்பிதத்தைச் செய்து ஆரையாகுதல்மோசப்படுத்தினால், அப்பொழுது இனிமேல் ஒருக்காலும் அப்படிச் செய்யமாட்டேனென்று வாக்குத்தத்தம்பண்ணித் தனது தப்பிதத்தை அறிக்கையிட்டுத்தான் செய்த தப்பிதத்தைக் கூடுமானாற் சரிக்கட்டிக்கொண்டானேயாகில் அவன் மறுபடியும் பாக்கியனாவான்.

இராமலிங்கமென்ற ஒரு பொடியன் தனது மாதாவுடையபெட்டகத்திற் காசிருக்கக் கண்டு அத்தை எடுத்து ஒருவரும் அறியாமல் வைத்துக்கொள்ள வேணுமென்றெண்ணினான். அப்படியேபிதாவும் இதெங்காலே என்று கேட்கும்பொழுது அதைப் போட்டுக்கிடந்து எடுத்தேனென்று சொல்லிக்கொள்ளவும் நினைத்தான். ஏனென்றால், அவன் தனக்குள்ளாலோசித்தது பெட்டகத்துக்குள்ளே போட்டுக்கிடந்தது. அவன் பணத்தை வைத்துக்கொண்டு விளையாடும்பொழுது பிதா இக்கேள்வியைக் கேட்டார். கேட்டபொழுது தான் முன்னெண்ணியிருந்த எண்ணத்தைத் தானே சொன்னான். தான் பணமெடுத்தது குற்றமென்றெண்ணினான். அதைப் போட்டுக்கிடந்தெடுத்தேனென்று சொலலும்பொழுது தான் திரக் குற்றவாளியெனறும எண்ணினான். இதை எங்கே போட்டுக்கிடந்தெடுத்தாயென்று பிதாக் கேட்டார்; இக்கேள்வியைப் பிதாக் கேட்பாரென்று இராமலிங்கம் முன்னே எண்ணியிருக்கவில்லை. ஆள் சற்றே முட்டுப்பட்டுத் "தெருவிலே கிடந்தெடுத்தேனென்று" நினையாத பிரகாரமாகச் சொன்னான். ஐயோ இதை ஆராக்கும் போட்டதென்றெண்ணி அதிசயப்பட்டான். இராமலிங்கனுந் தப்பிக்கொண்டேனென்றறிகிறது அவனுக்குச் சற்றே சந்தோஷமாயிருந்தாலும் தான் குற்றவாளியென்றெண்ணம் அவனைத் திகில்கொண்டவனாகப்பண்ணிற்று. அவன் அந்தப் பணத்தைப்பற்றி நினைத்த ஒவ்வொரு வேளையிலும மனச்சாட்சி அவனைக் கடிந்துகொள்ளுகிறதாகத் தோற்றிற்று. இப்போ அவன் பின்முன் பாராமல அந்தப் பணத்தைத் தகப்பனிடங் கொடுத்து அதை நான் தெருவிலே போட்டுக்கிடந்தெடுக்கவில்லை ஆச்சியினுடைய பெட்டகத்திற் கிடந்தெடுத்தேனென்று அறிக்கையிட்டானேயாகில் அவன் மறுபடியும் பாக்கியனாகக்கூடும; அப்படி அவன் கொடாமல விட்டு அப்பம் வாங்கப்போய் வாங்கிச் சிலதைத் தின்றான், சிலதைப் பொடியங்களுக்குங் கொடுத்தான். அப்படிச் செய்து நிர்ப்பந்தமான குற்றத்தினுணர்ச்சியை அவன் மனதிற்போட்டுக்கொண்டு மனச்சாட்சியை எதிரியாக்கி இன்னும் பெரிய குற்றத்தைச் செய்கிறதற்கெத்தனம்பண்ணிக்கொண்டான்.

### கேள்வி.

பிள்ளைகள் குற்றஞ் செய்கிறபொழுது சிவசாட்சியானது அவர்களைக் கடிந்துகொள்ளுகிறதோ?
பிள்ளைகள் குற்றஞ் செய்தபிறகுதானுங் கடிந்துகொள்ளுகுதா?
சமாதானத்தை நாமிழக்கும்பொழுது அத்தை மறுபடியும் அடையக்கூடிய வழியுண்டா?
அந்த வழியென்ன?
இராமலிங்கனுடைய கதையைச் சொல்லு.
ஒரு பாரப்புளி சொல்லும்படி அவன் முன்னே எண்ணினானா?
அவன் தனது பிதாவை அனுப்ப நினைத்தானா?
கடைசியிலே அவன் பாரப்புளி சொன்னானா?
இப்படிப்பட்ட பாவத்தினாலே அவனடைந்த பயமென்ன?
அவனடைந்த நட்டமென்ன?
அவன் தன்னுடைய மனப்பாக்கியத்தையும் சமாதானத்தையும் திரும்பயடைந்துகொள்வதெப்படி?
அவன் அப்படியே அடைந்துகொண்டானா?

## Principles of English Grammar.

(By William Lennie.)

### Etymology.

Etymology treats of the different sorts of words, their various modifications, and their derivation.

There are nine parts of speech; Article, Noun, Adjective, Pronoun, Verb Adverb, Preposition, Interjection and Conjunction.

### Of the Articles.

An Article is a word put before a noun, to show the extent of its meaning; as, a man.

There are two articles, *a* or *an* and *the*. A is used before a consonant.*—An is used before a vowel, or silent h; as, an age, an hour.

### Observations.

* A is used before the long sound of u and before w and y; as, a unit, a euphony, a ewe, a week, a year, such a one.—An is used before words beginning with h sounded, when the accent is on the second syllable; as, an heroic action; an historical account.

A is called the indefinite article, because it does not point out a particular person or thing; as, a king; that is any king.

The is called the definite article, because it refers to a particular person or thing; as, the king; that is, the king of our own country.

A noun without an article to limit it, is taken in its widest sense; as, Man is mortal; namely all mankind.

A is used before nouns in singular number only. It is used before the plural in nouns preceded by such phrases, as, a few, a great many; as a few books; a great many apples.

The is used before nouns in both numbers; and sometimes before adverbs in the comparative and superlative degree; as, the more I study grammar the better I like it.

---

## இங்கிலிசுப்பாஷையைக் கற்கப்புத மாணுக்கருக் குபயோகமாதற்பொருட்டு வழக்கத்தமிழ் நடையாக மொழி பெயர்க்கப்பட்ட வில்லியம் லெனிஸ என்ற துரை இங்கிலிசிற்செய்த இலக்கணச்சாரம்.

### சொல்லதிகாரம்.

சொல்லதிகாரமென்பது பலவகைச் சொற்களையும் அவைகளின் பல வேறுபாடுகளையும் பிறப்பையும் விளக்குகின்றது.

இங்கிலிசுப்பாஷையில் ஒன்பது வகைச்சொற்களுண்டு. அவையாவன சார்புச்சொல்லும், பெயர்ச்சொல்லும், உரிச்சொல்லும், பிறிதுச்சொல்லும், வினைச்சொல்லும், வினையுரிச்சொல்லும், முன்னிடைச்சொல்லும், உளத்தியவிடைச்சொல்லும், கூட்டிடைச்சொலலுமாம்.

### சார்புச்சொல்லியல்.

சார்புச்சொல்லென்பது பெயர்ச்சொலவின் பொருள்விரிவைக்காட்டுதற்கு அதற்கு முன்வைக்கப்படுஞ் சொல்லாயிருக்கின்றது. ஒருமனிதனென்பதுபோல

(A) அல்லது (an) எனவும் (the) எனவும் இரண்டுசார்புச் சொற்களுண்டு.

(A) என்பது மெய்யெழுத்துக்குமுன்னும் (*an) என்பது உயிரெழுத்துக்குமுன்னும் தொனியாத (h) என்ற எழுத்துக்கு முன்னும் பிரயோகிக்கபபடுகின்றன. ஓர்வயது, ஒருமணிப்பொழுது என்பனபோல.

### புறனடை.

(*A) என்றசார்புச்சொல் (u, w, y,) என்றவெழுத்துக்களின் நீண்டவொலியொடு (தொடங்குஞ் சொற்களுக்கு) முனபிரயோகிக்கப்படுகின்றது. ஒன்று. ஒருஇனியவோசை. ஒரு பெண்ஞடு. ஒரு கிழமை. ஒருவருஷம். இப்படிப்பட்டஒன்று. என்பனபோல.

(An) என்ற சார்புச்சொல் ஒலிக்கிற (h) எழுத்தோடுதொடங்கி எடுத்தலோசை இரண்டா மசையிலிருக்குஞ் சொற்களுக்கு முன் பிரயோகிக்கப்படுகின்றது. ஒருவீரச்செய்கை. ஓர் சரித்திரவரலாறு என்பனபோல.

(A) என்பது குறிப்பாக ஓராளை அல்லது பொருளைச் சுட்டிக்காட்டாததினாற் சுட்டாச்சாரபெனச் சொல்லப்படுகின்றது. ஓரரசன் என்பதுபோல இதுயாதோரரசனெனிருபிற்று.

(The) என்பது குறிப்பாக ஓராளை அல்லது பொருளைச்சுட்டுகி

Digitized by Google

ன்றபடியாற் சுட்டுச்சார்பெனச்சொல்லப்படுகின்றது. அந்த அரசன் என்பதுபோல—இது எமதரசனென்றுபொருள்.

தன் பொருளின் அளவை இவ்வளவென்று குறிப்பதற்கு வருஞ் சார்பில்லாத பெயர்ச்சொல் தன் பொருளின் விரிவை முழுமையுங் கொள்ளுகின்றது. மனிதன் சாவுக்குளனாயிருக்கிறனென்பதுபோல—இது எல்லாமனிதருமென்றுபொருள்.

(A) என்றசார்டச்சொல் ஒருமைப் பெயர்களுக்குமுன்மாத்திரம் பிரயோகிக்கப்படுகின்றது. a few, a great many என்ற தொடர்ச்சொற்கள் முன் வைக்கப்பட்டுவரும் பன்மைப்பெயர்களுக்கு முன்னும் பிரயோகிக்கப்படுகின்றது. உதாரணம் கொஞ்சப்புத்தகங்கள்; அநேக அச்சிப்பழக்கள்—என்பனபோல.

(The) என்ற சார்டச்சொல இரண்டெண்களாகவும் வரும்பெயர்களுக்குமுன்னும் சிலவேளை உயரொப்பளவையும் வேறிலொப்பளவையுமுடைய வினையுரிகளுக்குமுன்னும் பிரயோகிக்கப்படுகின்றது உதாரணம், நானிலக்கணத்தைப் படிக்குந்தோறும் அதில் ஆசை அபிவிர்த்தியாயிருக்கின்றது—என்பதுபோல.

☞ Judgement, abridgement முதலான சொற்களை (e.) என்றவெழுத்தில்லாமல் எழுதுவானேன்? (g) என்றவெழுத்து (e.) என்றவெழுத்தில்லாமல் (j.) எழுத்துப்போல எப்படி மெல்லமையாயுச்சரிக்கக்கூடும்? Walker என்பவர் செய்த அகராதியில் (judgment) என்றசொல்லின் கீழிருக்குங் குறிப்பைப்பார்க்கவும்.

## கிறிஸ்துமதம்.—CHRISTIAN.

### RULES FOR THE CONDUCT OF A CHRISTIAN LIFE.

(Abridged from "the practice of true Devotion" by Robert Nelson, Esq.)

2. *Morning Prayer.*—You must be sure never to omit your morning devotions, however pressing and urgent your business may be. We cannot reasonably expect the blessing of God upon our temporal affairs, if we do not beg it of him with entire submission to his will and pleasure; neither can our spiritual affairs succeed, without the assistance and direction of his grace, which we must always implore by fervent and diligent prayer. When we are retired for our devotions, we should entertain ourselves with reading some portion of the Holy Scriptures; and besides, if we feed our minds with perusing some good books, though for a quarter of an hour, we shall receive great profit and advantage from it; the subject will be apt to occur to our thoughts in those minutes of the day when we are most at leisure, especially if we have digested what we read by serious meditation. It will be also very proper to consider with thyself, what opportunities may present of serving God that day, and what temptations may offer to offend him; that you may be prepared, by a fixed resolution, to embrace the one, and to avoid and shun the other. They who govern a family must charge themselves with it as their duty, to call them together every morning to worship God. They are answerable for the souls of those that are under their care, either children or servants; and this practice is the best method to make them dutiful and obedient, and serviceable in their different stations.

காலவிண்ணப்பம்.—காலையில் எவ்வளவு நெருக்கிடையான வேலை உங்களுக்கு இருந்தாலும உங்கள் காலச் செபத்தில் தவறாதபடி பாருங்கள். பராபரனுடைய முழுப் பிரியத்துக்குஞ் சித்தத்துக்கும் ஏற்க அவரைப் பார்த்துத் துத்தியம்பண்ணுகிருக்கில் எமது நாள் வீதமான செய்கைகளில பலன் அடைவோமென்று எண்ணியிருக்கக்கூடாது. அல்லவென்று ஞானக் காரியத்திலும் செபத்தின் ஒத்தாசை இல்லாமலும் யாதொன்றையுஞ் செய்யக்கூடாது. செபம்பண்ணுவதற்கென்று நாங்கள் தனியே இருக்கையில், வேதவாக்கியத்திற் சில பங்கை வாசித்துச் சகவாசம்பண்ணவேண்டும். அதுவுமன்றிக் காலமணித் தியாலமாகத்தானுஞ் சில நலல புத்தகங்களை வாசித்தால் அதிலும் பெரிய பலனை அடைவோம்; அப்படி வாசித்ததைப் பயபத்தியாய் மனதில் ஏற்ற பிரகாரமாய் நினைத்திருந்தால், நாம் வேலைவிட்டு ஓய்ந்திருக்கும் நேரங்களிலும நினைக்க ஏதுவாய் இருக்கும். அந்த நாளிலேதானே பராபரனுக்கு ஊழியஞ்செய்வதற்கு என்ன சமயங்கிடைக்குமென்றும், அவரைப் பிரியவீனப்படுத்துவதற்கென்ன சோதனைகள் சம்பவிக்குமென்றும் அப்படிச் சம்பவிக்குமிடத்து நன்மையானவற்றைத் தழுவி மற்றதை விட்டுவிடுவதற்குமுன்னறவே உங்களிலே தானே சிந்திப்பது நலலது.

சமுசாரத்துக்கு முதலாளியாயிருப்பவர்கள் சமுசாரத்துக்குட்பட்டவர்களைக் காலமேதோறும் பராபரனை வணங்கும்படி அழைப்பது தங்கள்மேல் விழுந்த கடமையென்று எண்ணவேண்டியது. பிள்ளைகளாலும் வேலைகாரராலும் தங்கள் பராபரிப்புக்குக் கீழ்ப்பட்டவர்களுடைய ஆத்துமாவுக்கு அவர்களே உத்தரவாதிகளாயிருக்கிறார்கள். இப்பழக்கம் அவர்களைக் கடமைப்பட்டவர்களாக்குவதற்கும் கீழமைந்தவர்களாக்குவதற்கும் தங்கடங்கள் வேலைகளில் உறுதியாயிருப்பது சகலத்திலும் நல்லது.

### Scriptural proofs of the Doctrines and Duties of Christianity.

CONCERNING THE BEING AND ATTRIBUTES OF GOD.

2. *The Eternity of God.*

"Before the mountains were brought forth, or ever thou hadst formed the earth and the world, even from *everlasting to everlasting* thou art God" Psalm xc 2.

"Thus saith the high and lofty One that *inhabiteth eternity.*" Isaiah lvii 15

"For I lift up my hand to heaven and say, *I live for ever.*" Deut xxxii 40.

"Thy throne is established of old; *thou art from everlasting.*" Ps. xciii. 2

"Thy kingdom is an *everlasting* kingdom, and thy dominion endureth throughout *all generations* " Ps. cxlv 13.

"Thus saith the Lord, the king of Israel, and his Redeemer the Lord of hosts: I am the *first* and I am the *last*; and besides me there is no God." Isai. xliv. 6.

"I am Alpha and Omega, the *beginning* and the *ending*, saith the Lord, which is, and which was, and which is to come, the Almighty." Rev. i. 8.

"Unto the king *eternal*, immortal, invisible, the only wise God, be honour and glory for ever and ever." 1. Tim. i. 17.

உ. ஆயுவின்மை இலட்சணம்.

பருவதங்கள் தோன்று முன்னும் நீர் பூமியையும் பூச்சக்கரத்தையும் உருவாக்க முன்னும தேவரீர் அநாதியாய் என்றென்றைக்கும் பராபரனாயிருக்கிறீர. சங். கூ௰. உ.

நித்திய வாசகரும் பரிசுத்தரென்று நாமமுமுள்ளவருமாகிய உயரமும் உன்னதமுமானவர். ஏசா. ருஎ. ௰ரு.

ஏனெனில் நாம் நம்முடைய கரத்தை வானத்துக்கு நேராக எடுத்து நாம் என்றென்றைக்கும் பிழைக்கிறவர். உபா. ரு. ஆகமம. ௩உ. ௪௰.

உம்முடைய இராசாசனம் அப்போது முதலாய் உறுதியானது, தேவரீர் அநாதியாயிருக்கிறீர். சங். கூ௩. உ.

உம்முடைய இராச்சியம் எல்லாச்சதாகாலங்களிலிராச்சியமாகவும் உமமுடைய ஆளுகை எல்லாத் தலைமுறைதலைமுறையாகவுமிருக்கும். சங். ௱௪ரு. ௰௩.

நாம் முந்தினவரும் பிந்தினவருந்தானே, நீ நம்மைத்தவிரத் தேவனில்லையென்று இஸ்ரவேலினிராசாவாகிய கருத்தருஞ் சேனைகளின் கருத்தராகிய அவனுடைய மீட்பருஞ் சொல்லுகிறார். எசாயா. ௪௪. ௬.

இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ளகர்த்தர். நான அல்பாவும ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். அறிவித்தல. க. அ.

நித்தியமும் அழிவில்லாமையும அதரிசனமுமுள்ள இராசனுமாய் ஒருவராகிய ஞானமுள்ள பராபரனுமாயிருக்கிற அவருக்குக் கனமும் துதியும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. க. தீமோ. க. ௰எ.

Digitized by Google

பஞ்சதந்திரக் கதை.

மூன்றவது.

சந்திவிக்கிரகம், அல்லது அடுத்துக்கெடுத்தல்.

**PANCHA-TANTRA-KATEI.**

*The art of conquering an enemy by means of an affected friendship.*

[Continued from page 8.]

முற்காலத்திலே நான் குடியிருந்த ஒரு முது மரப்பொந்திலிருந்த கபிஞ்சலனென்னுங் குருவியும் நானும் மாலைகாலத்திற்பற்பல பேச்சுகள்பேசிக்கொண்டு சுகித்திருக்கையிலொரு நாள், அவன் வேறொரு பட்சியோடு கூடப்போய் மீண்டு வாராமையால், நான் ஐயோ! அவன் வலையில் அகப்பட்டானோ? ஆராகுதல் கொன்றார்களோ? தெரியவில்லை. எப்போதும் வேறோரிடத்திற்றங்குமவனல்லவே, என்றிப்படி விசனப்பட்டு வழிபார்த்துக்கொண்டிருக்கும்போது மூன்றும் நான் அவன் பொந்திலொரு முயல் வந்து நான் பற்பல விதமாய்த் தடுத்துச்சொல்லியும் கேளாமல் முரட்டுத்தனமாய்க் குடிபுகுந்தது. பிறகு எங்கேயோ சில நாள் கபிஞ்சலன் மனதின்படியே கெற்கனைத் தின்றுகொண்டிருந்து பிறகு தன்னிடத்துக்கு வந்து பார்க்கையில் தன் வீட்டில் முயலிருக்கக்கண்டு அதைப் பார்த்து, அடா சசமே! உனக்கென் வீட்டிலிருக்கை நன்றன்று, பொட்டெனப் புறப்பட்டுப் போவென, இதைக் கேட்டு முயல் அடா பேதா, இது உன் வீடன்றென் வீடே, வீணுகப் பொய்சொல்லிப் பயனில்லாமல நட்பையேனிழக்கிறாய்? வாவி, கிணறு, குளம், கோயில், சத்திரம் இவற்றின் சொந்தவமவற்றைவிட்டு நீங்கின பிறகு அந்நீங்கினவனிடத்திலிராது. மற்றும் ஒருவன் வீட்டைப் பிறனொருவன் பத்தாண்டளவும் யாவருமறியவநுபவித்தால் அவ்வீடவனஞ்த. இந்த விடயத்திற் சாட்சியும், எழுத்தும் பிரமாணமாகாது. இந்நியாயம் தேர்களிடத்திலிருக்கிறது, ஆனாற் பறவைகளிலெது வவதோ அது கைக்கொள்ளுமென்றிப்படித் தர்மபியாயமிருக்கிறதினால வீடெனதேயென, ஆக்கை நீர் தர்மசாஸ்திரத்தைக் குறித்துப் பேசுகின்றமையால் நீரும் நானும் சாஸ்திரிகளிடத்திற்போய் இதைக் குறித்துக் கேட்டு அவர்கள் ஆரை இருக்கலாமென்கிறார்களோ அவர்கள் இருக்கவுடம்படுவாமென்றுசொல்லி நிச்சயித்து இருவரும் விவாதம்பண்ணிக்கொண்டு போகையில் இவவழக்கெப்படியாகிறதோ பார்க்கலாமென்று நானும் அவர்களைத் தொடர்ந்துபோனேன். அங்கே கூர்ம்பல்லனென்னும் ஒரு பூனை இவர்கள் பேச்சைக் கேட்டிவர்கள் வழக்குத் தீர்ப்புக்குப் போகிறார்கள், இவர்களை மோசம்பண்ணவேண்டுமென்று நிச்சயித்து அந்த வழியிலாற்றங் கரையிற் கண்ணை மூடிக்கொண்டு சூரியனைப் பார்க்கிறாப்போல அபிநயித்துக்கொண்டு ஆ, ஆ! இந்தவசாரமான சமுசாரத்திலுண்டாகிற இன்பங் கணத்திலழிந்து கனாப்போற் பொய்யாகிறதனாற் றருமத்தை விட வேறே கதியில்லை. அறத்தைவிட்டெவனாட்களைக்கழிக்கிறானோ அவன் மரப்பாவையையொத்தவன். அவனை மூச்சுவிட்டுக்கொண்டிருக்கையிற்றானே பிணமென்றெண்ணவேண்டும், ஏனென்றால் எப்படித் தபிரிற்சாரமெய்யோ, எள்ளில் விசேஷமெண்ணெய்யோ அப்படிப் பிறைத்திருக்கிறதிற் சாரந் தருமமாம். இதைத் துறந்து மிகவுஞ் சோற்றைத்தின்றுகொண்டு காலங்கழிக்கிறவர்கள் நிலச்சுமையாயிருக்கிறார்களென்று துக்கப்படுகிறேன். ஓ, சனங்களே தருமம் பல பல இடையூறுகளோடு கூடிக்கொண்டிருக்கிறதாகையாற் சுருக்கமாய்ச் சிறந்த தருமஞ் சொல்லுகிறேன் என்னவெனில், பிறர்க்குதவிசெய்வதற்கொத்த புண்ணியமும் பிறரை வருத்துவதை ஒத்த பவமுமில்லை. மேலும், தனக்குத் துன்பந்தருவது பிறனுக்குந் தருமமென்றிப்படித் தாம இரகசியங்களைக் கேட்டுள்ளத்தல வைக்கவேண்டுமென, இப்படி அதன் வாக்கியத்தைக்கேட்டு முயல சொல்லுகிறது, கபிஞ்சலா! தருமஞ் சொல்லுகிறவன் ஆற்றங்கரையிலுட்கார்ந்திருக்கிறான், அவனைக் கேட்போமென, கபிஞ்சலன இவன் நமக்கியல்பான பகையாளி ஆகையால் தூரத்திலிருந்தே சொல்லவேண்டுமென்று நிருணயித்தவனைப் பார்த்து ஓ, தபோநிதியே! நீ அறம் உணர்ந்தவனாகையால் எங்கள் இருவருடைய வழக்கைக் கேட்டுத் தரும நூற்படி நியாயஞ் சொல்லவிட பொய் சொல்லுகிறவனைக் கொல்லவேண்டுமென, இவ்வார்த்தையைக் கேட்டுப் பூனை காதின்மேற் கையை வைத்து இப்படிப்பட்ட பேச்சை மறுபடி பேசாதையுங்கள்; ஏனெனில் நரகத்துக்குக் காரணமாகிய இதை விட்டு நான் அறத்தை அநுசரித்துக்கொண்டிருக்கிறேன். (இன்னும் வரும்.)

---

௬. அதிகாரம்.

வாழ்க்கைத் துணைநலம்.

௫௫. தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யுமழை.

பு. பிறதெய்வத்தைத் தொழாதவளாய்த் தன் தெய்வமாகிய கணவனைத் தொழுதுகொண்டே தூங்கியெழுபவள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்.

She who does not worship God, but who on rising worships her husband; if she say "Let it rain," it will rain.

*Drew.*

---

௫௬. தற்காத்துத்தற்கொண்டாற் பேணித்தகைசான்ற
சொற்காத்துச்சோர்விலாள்பெண்.

பு. பதிவிரதத்தன்மையிலே நின்றும் பிறழாமல், தன்னைக்கொண்ட கணவனையும் பாதுகாத்து இருவரிடத்திலும் நன்மை நிறைந்த புகழை நீங்காமற் காவல்செய்து மேலேசொல்லிய நற்குண நற்செயல்களிலும் மறப்பில்லாதவளே மனைவியாவாள்.

She is a wife who unweariedly guards herself, takes care of her husband, and preserves an unsullied fame.

*Drew.*

---

தை மீ.

சாலிவா. தைமீ. ௰௬தீ, முதல் மாசி ௰௩தீ வரைக்கும்.

| E. Date. | தமிழ்த் தேதி. | வாரம். | நட்சத்திரம். | | திதி. | | யோகம் | | கரணம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27 | ௰௬ | வெ | மூ | ௪௨ | து | ௨௫l | வி | ௰௭l | தை | ௨௫l |
| 28 | ௰௭ | ச | பூ | ௪௩l | தி | ௨௪ll | அ | ௰௩lll | வ | ௨௪lll |
| 29 | ௰௮ | ஞா | உ | ௪௯ | ச | ௨௫ll | வ | ௰௩l | சகு | ௨௫ll |
| 30 | ௰௯ | தி | தி | ௪௯lll | ச | ௨௭ll | சி | ௯ll | நா | ௨௭ll |
| 31 | ௨௰ | செ | அ | ௫௪lll | பி | ௩௰lll | வி | ௮lll | ப | ௩௰lll |
| Feb. | | | | | | | | | | |
| 1 | ௨௧ | பு | ச | ௯௰ | து | ௩௫l | வ | ௯ | பா | ௩ |
| 2 | ௨௨ | வி | ச | ll | தி | ௪௰ | ப | ௯lll | தை | ௭ll |
| 3 | ௨௩ | வெ | பூ | ௯lll | ச | ௪௫l | சி | ௰௩ | வ | ௰௨lll |
| 4 | ௨௪ | ச | உ | ௰௩l | ப | ௫௰ll | சி | ௰௨l | ப | ௰௮ |
| 5 | ௨௫ | ஞா | ரே | ௰௯ll | ஷ | ௫௫l | சா | ௰௩ | கவு | ௨௩ |
| 6 | ௨௬ | தி | அ | ௨௫l | ஸ | ௫௯l | சு | ௰௪ | கர | ௨௭l |
| 7 | ௨௭ | செ | பர | ௨௯lll | அ | ௯௰ | சு | ௰௪ | வி | ௩௰lll |
| 8 | ௨௮ | பு | கா | ௩௯l | அ | ௨l | பி | ௰௬ | ப | ௨l |
| 9 | ௨௯ | வி | ரோ | ௩௫lll | ந | ௯lll | மா | ௰௪l | கவு | ௯lll |
| 10 | ௩௰ | வெ | மி | ௩௯lll | த | ௪ | வை | ௮ll | கர | ௪ |

வெள்ளிக்கிழமை சங்கிராந்தி நாடி ௩௭, விநாடி ௨௩ல். கும்பரவி.

Digitized by Google

# SUPPLEMENT TO THE
# உதயதாரகை.—MORNING STAR.

௩ புத். சஞ்சிகை ௨.] ௲௮௱௪௰௩ (வரு). தை. ௨௬, தேயதி வியாழக்கிழமை, Thursday, January 26, 1843. [Vol. III. No. 2.


அகவிருட்பட்சித்து மிருதெருட்சட்க
விண்டிடவடபட்சந்து விளங்குதயநட்சத்திரத்தை
நச்சதனுடனே அச்சடிப்பிக்கும்
அச்சதனடிதொழும் உச்சிதகுணமுள

ஐயாவே.

சருவலோகத்தையும் படைத்துக் காப்பாற்றி ஆண்டு நடத்திக்கொண்டு வருகிற நித்திய ஆனந்த பரிசுத்த பராபரன் இத்தேசத்தின் மேல் அருள் புரிந்து சீர்திருத்தமுங் கிறிஸ்துமார்க்கமும் பரம்பிய தூரதேசமாகிய அமெரிக்காவில் இருந்து குருமாரை அனுப்பி அவர்கள் இவ்வூரவர்களை உயர்ந்த நிலைபரத்திற் கொண்டு வரத் தெண்டிக்கப்பண்ணுகிற அளவிறந்த தயவுக்காகப் பராபரனுக்கு மகா ஸ்தோத்திரம்.

நான் எழுதும்படி கைபிட்டுக்கொண்ட காரியம் மிக விஸ்தாரமாயிருந்தாலும் இது ஆற்றுமலாபத்துக் கடுத்த விசேஷித்தமுக்கிய காரியமெனப் பத்திராதிபர் உணர்ந்து உதயதாரகையில் இதற்கு இடங் கொடுப்பாரென்ற நம்பிக்கையோடெழுதுகிறேன்.

நான் வெகு காலமாக எனது ஊரவர்களைப் போலச் சைவ சமயத்தை அநுசரித்து வந்து இப்போ தருமசாலிகளும் வெகுசன உபகாரிகளுமாகிய கிறிஸ்துமார்க்கக்குருமார் இத்தேயத்தவர்களுக்குப் பண்ணும் போதனையைக் கேட்டதினாலும் அவர்கள் அச்சடிப்பிக்கும் புஸ்தகங்களை வாசித்ததினாலும் என் மனம் உணர்ச்சியடைந்து கிறிஸ்து மார்க்கத்தை ஆராயவேணுமென்ற விருப்பமுற்று விவிலியவென்னும் வேதாகமத்தை ஒழுங்காக வாசித்து வருகையில் எனது மனதிற் சில சமுசயங்கள் தோன்றினமையால் அவைகளை அகற்றும்பொருட்டுப் பின்வருங் காரியங்களை எழுதுகிறேன்.

௧வது. மோசே எழுதின, ௨ம். ஆகமம். ௨௫ம். அதிகாரத்தில், பராபரன் இஸ்ரவேற் சனங்களுடனே வாசம்பண்ணும்படி ஒரு வாசஸ்தலத்தை உண்டுபண்ணவேணுமென்றும், அது கட்டுகிறதற்குப் பொன் வெள்ளி வஸ்திரம், அபிஷேகத்துக்கு எண்ணெய், தூபத்துக்குச் சுகந்தவர்க்கங்கள், பதக்கத்துக்கு வயிரங் கோமேதக முதலிய இரத்தினங்கள் இவை முதலான காணிக்கைகளைச் சனங்களிடத்தில் வாங்கவேணுமென்றும, அந்த வாசஸ்தலத்தில் உடம்படிக்கையின் பெட்டியையுங் கெருபீன்களையும் ஸ்தாபித்துச் சமுகத்தப்பங் குத்துவிளக்கு முதலானவற்றை வைக்கவேணுமென்றும் பராபரன் மோசேக்குக் கட்டளை பண்ணினாரென்றும், ௩௯ம். அதிகாரத்திலே இப்படியே செய்து முடிந்ததென்றும், ௩. மோசே. ௰. அதிகாரத்தில் ஆடுமாடுகளைப் பலியிடவேண்டுமென்றும், ௨௪ம். அதிகாரத்தில் அப்பஞ் சுட்டுக் கர்த்தருக்கு முன்பாக வைக்கவேண்டுமெனறும், அது பாவம்போக்குகின்றதென்றும், ௪. மோசே. ௰௯. அதி. ௯. வசனத்தில் "ஆனாற் சுத்தமான ஒருவன் கிடாரியின சாம்பலை வாரிக்கொண்டு பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு தலத்திலே கொட்டிவைக்கக்கடவன். அது தீட்டை நீக்குந் தண்ணீருக்கென்று இஸ்ரவேற் புத்திரரின் சபைக்காகக் காத்து வைக்கப்படக்கடவது. அது பாவம்போக்குகின்றது" எனவும், ௮௰. சங்கீதம். ௧. வசனத்தில் கெருபீன்களில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும் எ—ம் ௨. சாமுவேல ௬. அதி ௨. வசனத்தில், கெருபீன்களினடுவிலே வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தர் எ—ம், ௯௯ சங்கீதம் ௧. வசனத்தில் கெருபீன்களின் மேல் வாசமாயிருக்கிறவர் இராசரீக்கம்பண்ணுகிறார் எ—ம், ௪. மோசே. ௰௬. அதிகாரத்தில் இஸ்ரவேற்சனத்துக்கு அவர்கள் பாவத்தினிமித்தம் ஒரு வேதனை சடுதியிற் சம்பவித்தபோது, உடனே ஆரோன் சீக்கிரமாய ஓடிப்போய்த் தீபதூபமெடுத்தாராதனை செய்து பாவ நிவிர்த்தி செய்ய அந்தப் பெரிய உபாதி நீங்கிற்று எ—ம், யோசுவா. ௩. அதிகாரத்தில் உடம்படிக்கையின் பெட்டியை ஆசாரியர் கொண்டுபோக யோர்தானதியிற் தண்ணீர் இருபுறமும் விலகி வழிவிட்டது எ-ம் ௬. அதிகாரத்தில அந்தப் பெட்டியைச் சுற்றிக்கொண்டு வரவெரிகோப்பட்டணந் தகர்ந்து விழுந்தது எ-ம், ௭. அதிகாரத்தில் இஸ்ரவேற் சனங்களுந் தலைவனாகிய யோசுவாவும் யுத்தத்திலே தோற்றுக் கிருபாசன மூடியிற் கெருபீன்களுக்கு முன்பாகச் சாட்டாங்கமாய் விழுந்து முறையிட்டுப் போர் வெல்ல வரம் பெற்றார்கள் எ—ம், ௨. சாமுவேல் ௬. அதிகாரத்தில் ஆடல் பாடலுடன் சகல கீதவாத்தியங்களும் ஆரவாரிக்கச் சனங்களெல்லாரும் ஒடுக்கவணக்கத்துடனே சேவித்துவர, உடம்படிக்கையின் பெட்டியைக் கொண்டுவந்து வைத்து அதற்கு முன்பாக அநேக ஆடுமாடுகளைப் பலியிட்டார்கள் எ—ம், ௪. மோசே. ௨௧. அதிகாரத்தில் மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தைக் கம்பத்தின் மேலுயர்த்தக் கொள்ளிவாய்ச் சர்ப்பத்தினாற்கடியுண்டவர்கள் அதைக் கண்டு தொழுது சாகாமற் பிழைத்தார்களென்றுஞ் சொல்லியிருக்கின்றது, ஆனாலும் இக்கிரியைகளுக்கும் இப்போ சைவர் செய்கிற தேவாராதனைக்கும் வித்தியாசமென்ன என்று எனக்கு விளங்கவில்லை. பராபரன் தமது புத்திரரென்று தெரிந்தெடுத்த இஸ்ரவேற் சனங்கள் கர்த்தர் மரமுதலியவற்றாற் செய்தபெட்டியிலுங் கெருபீன்களிலும் வாசம்பண்ணி அருள் புரிந்தாரென்று நம்பினார்கள். சைவரோ விக்கிரகங்களில் வாசம்பண்ணுகிறாரென்று நம்புகிறார்கள், அவர்கள் கர்த்தர் இருக்கிறதற்கென்று வாசஸ்தலத்தை உண்டாக்கினார்கள், இவர்கள் கோவில்களைக் கட்டுகிறார்கள், அவர்கள் கெருபீன்களையும் வெண்கலச் சர்ப்பத்தையுந் தொழுதார்கள். இவர்கள் பொன் வெள்ளி முதலியவற்றாற் செய்த விக்கிரகத்தைக் கும்பிடுகிறார்கள், அவர்கள் கோவிலிற் சமுகத்தப்பம் அதிரசமுதலியவற்றை வைத்தார்கள், இவர்கள் பிரசாத பழங்களை வைக்கிறார்கள், அவர்கள் தீபதூபங் காட்டினார்கள், இவர்களும் அப்படியே செய்கிறார்கள், அவர்கள் கிடாரியைச் சுட்டெடுத்த சாம்பலைக்கொண்டாடினார்கள், இவர்கள் கிடாரியின் எருவைச் சுட்ட சாம்பலைக் கொண்டாடுகிறார்கள்.

௨வது. ஆசார அநாசாரங்களும் அப்படியே வேறுபாடின்றி இருந்ததாகத் தோன்றுகின்றது. ஏனெனில் ௩. மோசே. ௰௨. அதிகாரத்தில் ஒரு ஸ்திரியானவள் ஆண்பிள்ளையைப் பெற்றால் நாற்பது நாளும், பெண்பிள்ளையைப் பெற்றால் எண்பது நாளுந் தீட்டாயிருப்பாளென்றும், அவள் சரீரத்தையும் அவள் இருந்த இடத்தையுங் கிடந்தபடுக்கையையுந் தொட்டவர்கள் நீரில ஸ்நானம்பண்ணி வஸ்திர சுத்திசெய்து சாயுங்காலமட்டுந் தீட்டாயிருப்பார்களென்றும், ௪. மோசே. ௰௯. அதிகாரத்தில் மனிதர் பிணத்தைத் தொட்டவர்களும் அது கிடந்த இடத்திலிருந்தவர்களும, அது கிடந்த வீட்டில மூடாமற்றிறந்திருந்த பண்டமெல்லாம ஏழுநாள் மட்டுந் தீட்டாயிருக்குமென்றும், ௩. மோசே. ௰௧. அதிகாரத்தில் உணவுக்கடுத்த மிருகஞ்செத்தால் அப்பிணத்தைத்தொட்டவன் சாயுங் காலமட்டுந் தீட்டாயிருப்பானென்றும், இப்படியே அநேக இடங்களிற் சைவசமயத்தார் செய்யுங் கிரியைகளுக்கொத்த கிரியைகளைச் செய்யும்படி பராபரன் கட்டளைபண்ணியிருக்கிறார். ஆனால் சைவருடைய ஆசௌச தீபிகை பிராயச்சித்தசமுச்சயம் முதலான வேதாகமங்களை அறிந்தவர்கள் பராபரனுடைய புத்திரராகிய இஸ்ரவேற் சனங்களுக்குள் முற்காலத்திலிருந்த சடங்குகள் இக்காலத்துச் சைவருடைய சடங்குக்கு ஒப்பாயிருந்தனவென்று பகுத்தறிவார்கள் ஆம, சொல்லப்போனால சைவரைப்பார்க்க அவர்கள்தான் ஆசார அநாசாரங்களை அதிகமாய்க் கவனித்தார்களென்று துலாம்பரமாய் விளங்கும.

இதிற் சீர்தூக்கிப்பார்க்கவேண்டியதென்னவெனில், சைவருடைய விக்கிரகாராதனையும விபூதியணிதலும ஆசார அநாசாரம பார்க்கிறதும் இவை முதலிய மற்றுங் கிரியைகளுந் தேவனுக்குகந்தவைகளும் மோட்சமடைதற்குத் தகும் வழியுமாயிருக்கிறதற்கும் பராபரன் இவைகளிற் பிரியப்படுகிறதற்குங் கூடிய தன்மையுள்ளவையென்று விசுவாசிக்கிறது சொய புத்திக்கு விரோதமென்றும் சிறு பிள்ளைகளுக்குந்தானுஞ் சிரிப்புண்டாகத்தக்க இப்படிப்பட்ட கிரியைகளைச் செய்யும்படி பராபரன் கட்டளைபண்ணமாட்டாரென்றுங் கிறிஸ்துமார்க்கக் குருமார்சொல்லுகிறார்கள்.

Digitized by Google

அப்போ முன் பராபரனுடைய கட்டளையின்படி இப்படிப்பட்ட கிரியைகளைச் செய்தவர்கள் பராபரனுடைய புத்திரரென்று அழைக்கப்பட்டு அவரைப் பிரியப்படுத்தினதெவ்விதம்? அவர்களுடைய கிரியைகள் விக்கிரகாராதனையல்ல. ஆனாற் பராபரன் அருபியானதினால் மனதிலே அதிக உறுத்துதலாக இருக்கிறதற்காகக் கண்ணினாற் காணும்படி அப்படிச் செய்தார்கள் என்று மறுமொழி சொன்னால் அந்த நியாயஞ் சைவருக்கும் பொருந்தாதா? பராபரன் தாம வாசம்பண்ணும்படி வாசஸ்தலத்தைக் கட்டுவித்து அதில் உடம்படிக்கையின் பெட்டி முதலியவற்றை வைப்பித்து அதில் வாசம்பண்ணிச் சமுகத் தப்பமுதலானவைகளை ஏற்றுக்கொண்டு தேவாத்தியங்களில மகிழ்ந்து சனங்கள் ஆசார அநாசாரங்களைக் கைக்கொள்வதிற் பிரியமுற்று ஒருகாலத்தில் இருந்தாரென்பதை நம்புகிற கிறிஸ்தவர்கள், இக்காலத்திற் சைவர் தாங்கள் மெய்யென்று நம்புகிற சைவமதத்தின்படி கோயில் கட்டி விக்கிரகத்தை வைத்து ஆவாகனம்பண்ணினதின் மேல் பராபரன் வாசம்பண்ணுகிறாரென்று நம்பிப் பழம் பிரசாதங்களைப் படைத்துத் தேவாத்தியங்களை முழங்கச் செய்து இவைபோலுங் கிரியைகளை நடப்பிக்கிறதிற் கடவுள் பிரியப்படக்கூடியதன்மையில்லையென்றும், அவை சொய புத்திக்கு விரோதமானவைகளென்றும் இப்படிப்பட்ட கிரியைகளைச்செய்யும்படி தம்பிரான் கட்டளைபண்ணுவாரென்று நமப இடமில்லை என்றுஞ் சொல்வதென்ன? இஸ்ரவேற் சனங்கள் இக்கிரியைகளை நடத்திவந்த காலத்திற் பராபரனுடைய கட்டளைப்படி தவறின்றிச் செய்தவர்கள் மோட்சஞ் சேரவேண்டுமே. பின்னை அப்படி மோட்சஞ் சேரக்கூடியதாகத் தேவனுடைய கட்டளைப்படி அநுசரித்துவந்த கிரியைகளுக்கொத்த கிரியைகளை இப்போ செய்கிறவர்களைப் பார்த்து இது பராபரனுக்கருவருப்பான செய்கையென்று சொல்பவர்கள், முன்னே பராபரன் கொடுத்த கட்டளைகளெல்லாம் வீணானவையென்றும அறியாமையினாற்கொடுத்தாரென்றும் ஒத்துக்கொள்ளவேண்டுமே. ஆட்டுக் குட்டியைப் பலிசெலுத்தினது கிறிஸ்துநாதர் வந்து பாடுபடுவாரென்றதற்கு அடையாளமென்றுகுதல் சொல்லலாம். ஆனாற் பிரேதத்தைத் தொடுகிறதும் வீட்டுக்குத் தூரமான ஸ்திரியைத் தொடுகிறதும் ஆகாதென்றும், ஸ்திரி பிள்ளைப் பெற்றால் தீட்டாயிருப்பாளென்றுங் கட்டளைபண்ணினது என்னத்தை நோக்கி, இப்போ அருசங்களைக்கொண்டாடுகிறது பயித்தியமென்று சொல்லுகிறது. முற்காலத்தில் அவைகளைக்கொண்டாடவேண்டுமென்று பராபரனே சொன்னதைப் பயித்தியம் என்கிறதுபோலாமே. முற்காலத்தில் ஆடம்பரங்களுடன் தேவனை வழிபட்டது சரியென்று இக்காலத்துக் கிறிஸ்தவர்களொத்துக்கொண்டும் சைவர் அப்படிச் செய்வது தேவவழிபாட்டிற் சிந்தனை செல்வதற்கு ஓர் பிரதான தடையென்று சொல்வதென்ன? அலலாமலுங் காணிக்கை கொடுக்கிறவர்களையும் பிரசாதம் பழவர்க்கங்களைக் கோவிலிலே படைக்கிறவர்களையும பார்த்துக் கத்தர் கைக்கூலி வாங்குகிறாரோ அவர் அவைகளைச் சாப்பிடுகிறாரோவென்று கிறிஸ்தவர்கள் கேட்கிறதினாலே முன்னே இஸ்ரவேற் சனங்கள் வைத்த சமுகத்தப்பம் அதிரசம் முதலியவற்றை அப்போ பராபரன் வறிய நிலைபரத்திலிருந்து பசியுண்டாய்ப் புசித்தார் என்று அநுமானிக்கவேண்டியல்லோ இருக்குது. சைவருடைய கிரியைகள் சிறு பிள்ளைகளுக்குஞ் சிரிப்புண்டாகத்தக்கதென்றுஞ் சுயபுத்திக்கு விரோதமென்றுங் கிறிஸ்தவர்கள் சொன்னால் மேற் காட்டிய பிரகாரம் இக்கிரியைகள் ஒரு காலத்திலே உகந்ததாயிருந்ததென்பதைக் கிறிஸ்தவர்கள் ஒத்துக்கொள்வதினால் அப்படியலலவென்பதற்கு அவர்களும் அவர்கள் வேதமுமே சாட்சி. கிறிஸ்துமார்க்கக் குருமாருடைய போதனைகளை நான் கேட்டபோது, என் மனம் அதிகம் உருகி வேறுபட்டுத் தமிழ்ச் சமயம பொய்யென்றுங் கிறிஸ்து சமயம ஒருவேளை மெய்யாயிருக்கக் கூடுமென்றும் நான் நினைத்து விவிலியவென்னும் வேதாகமத்தை ஆராய்ந்தேன். ஆனால் அதிலேபோவென்றாற் கிணற்றிலிருந்து பூதம புறப்பட்டாற்போலும் புலிபூருக்கஞ்சி நரிபூருக்குப் போய் நரிபூரும் புலிபூராயிற்று என்றும்பாலுமாயிற்று.

கவது. இஸ்ரவேற்சனங்கள் நடத்தின சடங்குகளை இப்போவும் எப்போவுங் கைக்கொள்ளவேணுமென்பது, ௩. மோசே. யஎ. அதி. எ. வசனத்தில் "இது அவர்கள் தலைமுறைகளில் அவர்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கவும்" எனச்சொல்லியிருக்கிறதினாலும அப்படியே, ௩. அதி. யஎ. வசனத்திலும், எ. அதி. கக. வசனத்திலுமா அப்படியே, உக. அதி. யச. வசனத்திலும், ச. மோசே யஅ. அதி. உக. வசனத்திலும், இவைபோலும் வேறநேகவசனங்களிலுஞ் சொல்லியிருக்கிறதினாலும் விளங்குகின்றது. ஆனாற் கிறிஸ்துநாதர் பிறந்தபின்பு கைக்கொள்ளவேண்டியதில்லையென்று சொல்லுகில் மேற்காட்டிய வசனங்களில் அப்படி யொருகாலவரையைக் குறியாமல் நித்தியகட்டளையென்று சொல்லியிருக்குதே. நித்தியமென்றதின் கருத்தென்ன? அப்படித்தான் கிறிஸ்துநாதர் பிறக்குமளவுங் கைக்கொள்ளவேண்டியதென்று சொல்லுகில் அவர் பிறந்தபின்பு அந்தச்சடங்குநடக்கவில்லையா? அவருக்குச் சுன்னத்துப்பண்ணினதேன்? அவருடையமாதாப் பிள்ளைப்பெற்ற பின்பு மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி பலியிட்டதேன்? கிறிஸ்துவைத் தேவாலயத்துக்குக்கொண்டுபோனதேன்! கிறிஸ்துநாதர் ஒரு குட்டரோகியைச் சுத்தமாக்கி மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியனுக்குக் காட்டிப் பலிசெலுத்துவாயாகவென்று அவனுக்குக் கற்பித்ததேன். (லூக்கா. ௨. அதிகாரத்தையும் ரு. அதிகாரத்தையும்பார்)—அப்படியல்லவென்று கிறிஸ்துநாதர் இறக்குமளவுங் கைக்கொள்ளவேண்டியதென்று சொல்லுகில் அவர் இறந்தபின்பு அந்தச்சடங்குகள் நடக்கவில்லையா? நடந்ததுண்டு. எப்படியெனில் அப்போஸ்தலர்நடபடி. யஅ. அதி. யஅ. வசனத்தில் பவுல் தனக்கொரு பிராத்தனையுண்டாயிருந்தபடியால கெங்கிரேயாப்பட்டணத்திலே சிரசு சவரம்பண்ணிச் சீரியாத்தேசத்துக்குப் போகும்படி கப்பலேறிப்போனான். எனவும்—உக. அதி உகூ வசனத்தில் அப்பொழுது பவுலு அந்த மனிதரைச் சேர்த்துக்கொண்டு மறுநாளிலே அவர்களுடனேகூடச் சுத்தம்பண்ணிப் பின்பு தேவாலயத்திற் பிரவேசித்து அவர்களில் ஒவ்வொருதனுக்காக வேண்டியபலிகொடுக்குமளவுஞ் சுத்தமாக்குகிறதற்கேற்ற நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான், எனவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றனவல்லவா? அன்றியும் பவுல் தீமோத்தேயுவுக்குச் சுன்னத்துப்பண்ணினதல்லவா? அதுவன்றிக் கிறிஸ்துநாதர் உயிரோடிருக்கையிற் பழையேற்பாட்டொழுங்குகளை இனிமேலநுசரிக்கவேண்டாமென்று சொன்னதாகச் சுவிசேஷத்திலெங்கேயென்றுதல் காண்குதா? அப்படிச் சொல்லித்தானிருந்தாலும் மோசேக்குப்பராபரன் நித்தியகட்டளையாயிருக்கக்கடவது என்று சொன்ன சொல்லுக்கு மாறுபாடாயிருக்குமே.

ஆகையால் நிதானிக்கவேண்டியதென்னவெனில், விக்கிரகத்திலே பராபரன் வாசம்பண்ணி அநுக்கிரகஞ்செய்வது கூடியகாரியமென்றும், இப்போ சைவர் செய்கிறசடங்குகள் ஒவ்வொன்றுங் கிறிஸ்தவர்கள் சொல்லுகிறதுபோற் சுவாப அறிவின்படி பராபரனுக்கடாததுஞ் சிறுவருக்குஞ் சிரிப்புண்டாகத்தக்கதுமல்லவென்றும், பழையேற்பாட்டிற்கண்டிருக்கிற சடங்குகளைச் சதாகாலங்களுக்குங் கைக்கொள்ளவேணுமென்று சொல்லியிருக்கிறபடியாலுங் கிறிஸ்துநாதரும் அவர் சீஷரும் அக்கட்டளைப்படி அவற்றைக் கைக்கொண்டபடியாலும் இக்காலத்திற் கிறிஸ்தவர்களும அவைகளைக்கைக்கொள்ளவேண்டியது அவர்கள் கடமையென்றும, அவர்கள் அவைகளைக்கைக்கொள்ளாதுவிட்டது விபரீதபுத்தியென்றும் பூரணமாய் விளங்குகின்றது இப்படிக்கு

யாழ்ப்பாணம் ௲அ௱சஉ௵. } சைவன் குமாரன
ஐப்பசி௴ யது. } நன்மதாபேட்சன்.

## பத்திராதிபர் குறிப்பு.

மேலே பிரசுரஞ்செய்திருக்கிற கடிதம் மிகப் பெரிதாயிருக்கிறபடியால் நாங்கள் அதைப் பற்றி மறுமொழியாக ஆயத்தப்படுத்தின கவனிப்புகளை இச்சஞ்சிகையிலேதானே பிரசுரம்பண்ணுவது தெண்டிபபாயிருக்கின்றது. ஆகையாற் பின்வருஞ் சஞ்சிகையில் அக்கவனிப்புகளைப் பிரசித்தப்படுத்துவோமென்று இத்தால் அனைவர்க்கும அறிவிக்கிறோம்.

---

[Translation of the foregoing.]

*O Sir, of benevolent spirit—who worships the feet of God, and who, with good desire, publishes the shining Morning Star, in the Northern Province—which is calculated to remove the inward darkness in order that the eye of knowledge may increase.*

Let the eternal and holy God who created all the universe and upholds it, be praised for his having condescended to the people of this land, and sent the missionaries from a far country—from America, where civilization and Christianity prevail, and for employing means to elevate the people. Though what I undertake to write is a subject of great extent, yet hoping that the editors will consider it

Digitized by Google

an important means for promoting the interest of souls, and give room for it in the *Morning Star*, I venture upon it.

For a length of time I professed *Sivaism*, but now, partly because I have heard the sermons which the charitable and benevolent missionaries have preached to the people of this country, and partly because I have read the books printed at Manepy, my mind is convinced of the error and convicted of the truth, and having had a desire to examine the Bible, upon my reading it regularly, some doubts have arisen in my mind, and I write this in order to have them removed.

1. It is said in Exodus 25th Chap. "This is the offering which ye shall take of them, gold and silver, and brass," "oil for the light, spices for anointing oil, and for sweet incense, onyx stones and stones to be set in the ephod, and in the breastplate. And let them make me a sanctuary that I may dwell among them." "And thou shalt make a candlestick of pure gold;" and in the 37th chapter it is said, that all the above mentioned articles were made.—Leviticus 17th chap., it is said that an ox, lamb, and goat were killed as an offering—and in the 24th chap., it is said they should bake some cakes and put them before the Lord and they will be a purification for sin—and in Numbers 19th chap. 9th verse "A man that is clean shall gather up the ashes of the heifer and lay them up without the camp in a clean place, and it shall be kept for the congregation of the children of Israel. it is a purification for sin." and in Psalm 80th chap. 1st verse "thou that dwellest between the Cherubims, shine forth," 2d. Samuel 6th Chap. 2d. verse "Lord of hosts that dwelleth between the cherubims"—and in Psalm, 99th chap. 1st verse "he sitteth between the cherubims; let the earth be moved." In Numbers 16, 19, 21st chap. it is said, when the Israelites, for their heinous sins, were under the influence of a plague, Aaron took a censer, and put fire therein from off the altar, and put incense, and went quickly unto the congregation and made an atonement for them—in Joshua 3rd. chap. it is said-when the priests carried the ark of covenant, the water of Jordan was divided and gave them way to pass by—in Joshua 6th chap. it is said-when the Israelites compassed the city of Jericho, the wall of that city fell down-in Joshua 7th chap. it is said when the Israelites and their leader Joshua waged a war against a certain people and having been vanquished by them, they (the Israelites, with Joshua) complained of it to the Lord, and they were told by the Lord that they will conquer the enemy-in 2d Samuel 6th chap. it is said, David and all the house of Israel played before the Lord on all *manner* of instruments made of fir wood, even on harps, and on psalteries, and on timbrels, and on cornets, and on cymbals, and it is also said in this chapter, that oxen and sheep were killed before the ark of covenant—in Numbers 21st chap. it is said-Moses made a serpent of brass, and put it upon a pole, and that if a serpent had bitten any man, when he beheld the serpent of brass, he lived.

In reference to all these verses, I do not understand what is the difference between the rites and the ceremonies of Sivas and those of the Bible. The Israelites who were chosen by God as his own children believed that the Lord who dwelt in the ark made of wood, and who lived between the cherubims had bestowed grace upon them. The Sivas believe that God dwells in the idols. They (the Israelites) made a sanctuary for the worship of God. The Sivas build temples, and worship the idols made of gold, and silver. The Israelites had shew-bread and wine in their sanctuaries. The Sivas have fruits for their idols. The Israelites took incense. The Sivas also do so. The Israelites burnt heifer and took its ashes for their use.

2. *About the Purification.* Leviticus 12th chap. It is said, If a woman have conceived seed, and borne a man-child, then she shall be unclean seven days, according to the days of the separation for her infirmity shall she be unclean, and in the 8th day the flesh of his foreskin shall be circumcised, &c. —and in Numbers 19th chap. it is said—He that toucheth the dead body of any woman shall be unclean seven days and on the seventh day he shall purify himself and wash his cloths and bathe himself in water and shall be clean at even—in Leviticus 11th chap.- it is said-Whosoever toucheth the carcase of them shall be unclean until the even.

In many other places God has commanded to perform such ceremonies as are directly analogous to those of the Sivas; but those who are acquainted with the Hindu Scriptures called *the "Lamp of Purification"* and the *"Doubt of Expiation,"* do know very well that the rites and ceremonies observed by the children of God (Israel) are similar to those of Sivas. Strictly speaking, the Israelites more punctually attended the ceremonies than the Sivas.

Upon investigating these matters, the Christian missionaries do protest against the idol worship, rubbing ashes, observing the immemorial custom and usage, and other similar rites, and say that these ceremonies are not in the way to please God, and God will never command or order such kind of unmeaning ceremonies, and they are against our own understandings, and also ridiculous even to children. Then how did those who performed these rites and ceremonies, please God in the time of old, and why were they called the children of God? In answer to this query, If you say that their (Israelites') rites and ceremonies are not the idol worship, but as God is an invisible Being they performed these ceremonies in order that the thoughts of God may be more indelibly impressed upon their hearts —will not this answer be agreeable to the Sivas? or in other words will not the Sivas have the same reason to answer so? Why do the Christians who believe—*that God at one time was pleased with the timbrels, cymbals, cornets, and also with purification or cleanliness, and ordered the ark of covenant and shew-bread to be kept in the sanctuary*, &c. say that our (Sivas,) *blowing* the musical instruments, (such as cymbals, cornets. &c.) *building* temples for the idols and *transfusing* the divinity into an image. by means of prayer and invocation, will not only be disagreeable in the sight of God, but also such doings are against our own understandings, and also say that there is not the least room to believe that God will ever command such doings.

At the time when the Israelites performed these ceremonies, those who without failure act according to the commandment of God must certainly go to heaven; but those (Christians) who deride and abhor the doings of the Tamil people who perform services similar to those which the (Jews) performed according to the command of God in order to go to heaven, must then admit that according to these commandments given by God, that God in the time of old gave all those commandments through ignorance and foolishness. Perhaps we may say that the killing of a Lamb is an emblem of the suffering of Jesus Christ; but why did God say that the *touching* of the carcase and of the woman who is in the menstruous state, and of the woman when delivered a child will be unclean? If you say that the observance of such uncleanness is foolish and unmeaning, cannot we say that the *commandment*, given by God in the time of old in order to observe it, is foolish and unmeaning?

Tho' the Christians of this time acknowledge that the Christians of the old time worshipped the Lord with pomp and parade, yet why do they say that our Siva worship attended with pomp and parade is a principal impediment to our adoration? Moreover, when we spread fruits and other offerings in the temple as an oblation to God, you the Christians ask us—Does God get bribery? Does God eat them up? From these two questions, we may draw an inference, that in the time of old, the Israelites put wines and shew bread before God; he, being in an indigent state, has eaten them up. If the Christians say that the rites and ceremonies of the Sivas are ridiculous even in the sight of children, they (the Christians) and their Bible are credible witnesses that those ceremonies were agreeable to those Christians who were in the time of old.

When I heard the doctrines of the Christian missionaries, my heart was moved and having entertained a thought that Sivaism is false and probably Christianity is true, I examined the Bible—but alas! it is as if a goblin came from a well, and fearing the country of the tiger, went to the country of the jackal-and the country of the jackal became the country of the tiger.

3. *The rites and ceremonies performed by the Israelites should be continued for ever and ever*; for an example.—

Leviticus, xvii. 7 —iii. 17.—vii. 36.—xxiii. 14. Numbers, xviii. 23.

In all these verses and in some other, it is said, It shall be a perpetual statute for your generations, throughout all your dwellings, that ye eat neither fat nor blood. Ye shall eat neither bread, nor parched corn, nor green ears, until the self same day that ye have brought an offering unto God: it shall be a statute for ever throughout your generations in all your dwellings, &c, but if you say that those ceremonies are not necessary after Christ was born, it is said indefinitely in the verses quoted above (without fixing a time) "*thro' your generations.*" What is the meaning of *thro' your generations?*" If you again say that the *birth* of Christ supercedes the necessity of performing those rites and ceremonies, are not those ceremonies performed even after he was *born?* Why was he then circumcised? After he was born, why were offerings performed in accordance with the Mosaic law? Why was he carried to the temple? After Christ healed a man of leprosy, why did he order that man to go to the priest and show himself, and make offerings according to the Mosaic law? (See Luke 2d and 5th Chapter.)

Moreover, if you say that these ceremonies should be performed till the death of Christ, were not these ceremonies performed after his death. They were. To prove this-see Acts xviii. 18. "Paul after this, tarried there yet a good while, and then took his leave of the brethren, and sailed thence into Syria, and with him Priscilla and Aquilla; having shorn his head in Cenchrea: for he had a vow." and in xxi. 26 "Then Paul took the men; and the next day purifying himself with them, entered into the temple, to signify the accomplishment of the days of purification, until that an offering should be offered for every one of them." Moreover, was not Timothy circumcised by Paul? Is it found any where in the Bible that Christ has ever said that, these ceremonies should not be performed while he was living? If it be found in the Bible, will it not be at variance with what God said to Moses—"*It shall be a perpetual statute?*" What is the meaning of "*It shall be a perpetual statute?*"

Therefore, we should judge,—that God who is in the idol is able to vouchsafe grace to all—that the ceremonies which the Sivas perform now are not ridiculous (as the Christians say) even in the sight of children-that it is a duty incumbent upon every Christian to observe those ceremonies pointed out in the Bible—that it is also found in the Bible itself that Christ and his disciples performed those ceremonies—and that therefore it is unreasonable for Christians to scout all those ceremonies and rites as ridiculous. Your's &c.

Jaffna, 10th. Oct. 1842. The son of a worshipper of Siva, and

A LOVER OF GOOD RELIGION.

[This Article is so long as to preclude from this No. the remarks which we have prepared in answer to the questions and observations of our Correspondent. We shall hope to find place for them in our next No.]

---

## புதினச் சங்கதிகள்.

### AERIAL STEAM COACH.—ஆகாயரதம்.

ஐரோப்புகண்டத்திலே விசேஷமாய் லண்டன் பட்டினத்திலே காற்றைக்கொண்டும் புகையைக்கொண்டும் கப்பல்கள் பாயில்லாமலும் இரதங்கள் குதிரையில்லாமலும் நினைத்தவிடத்துக்கு ஓடச் செய்வது சாதாரண வழக்கமாயிருக்கிறதென்று நம்முடைய தேசஸ்தருக்குத் தெரிந்திருக்கலாம். இவைகள் எல்லாம் ஆச்சரியமல்ல. இப்பொழுது லண்டன் பட்டினத்திலே கூடியிருக்கிற சங்கத்தாருடைய கருத்து நிறைவேறும்படி கடவுள் கிருபை செய்தாராகில் அது நமக்குப் பிரமிக்கத்தக்க அதிசயமாயிருக்கலாம். அதெப்படியெனில், லண்டன் பட்டினத்திலே கலவிசாஸ்திரிகளும் தத்துவஞானிகளுங் கூடி ஒரு வாரம் லண்டன் பட்டினத்துக்கும் மற்றொரு வாரம இந்தியாத்தேசத்துக்கும் மனிதர் வரத்துப்போ

Digitized by Google

க்காயிருக்கும்படியான ஒரு எந்திரஞ்செய்யவேண்டுமென்று யோசிக்குமிடத்தில், காகிதப் பத்திரங்களும் சில மனிதரும் அடங்கிய ஒரு இரதம் காற்றை இறகாகவும் புகையைக் குதிரையாகவுங் கொண்டு லண்டன்பட்டணத்தில இருந்து இந்தியாத் தேசத்துக்கு ஆகாய மார்க்கமாய் நாலு நாளைக்குள்ளே பறந்துவரும்படிக்கான உபாய சூத்திரத்தைக் கண்டுபிடிக்கவகைதேடுகிறார்களென்று இப்பொழுது ஓவர்லாண்டுமெயில் என்னுந் தபால்கொண்டுவந்த சமாசாரங்களினால அறியலானோம். ஆயினும் முற்காலத்தில் ஆகாய இரதங்களுண்டாயிருந்தனவென்றும் அவைகள் ஆகாயமார்க்கமாய் ஓடினதையுஞ் சண்டைபண்ணினதையும் அஞ்ஞானிகளுடைய பொய்க்கதைகளினாற் கேள்விப்பட்டிருக்கிறோமேயொழிய நாம கண்ணினாலே பார்த்ததில்லையே. இப்பொழுது அப்படிப்பட்ட இரதங்களை நாம் கண்ணாலே பார்த்தால் நமக்கு மெத்த அதிசயமுண்டாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

### BIBLE—வேதாகமங்கள்.

பங்காள தேசத்துக்குக் கவர்னர் செனரலாகிய எல்லென்பரோவென்பவர் கவர்னமெண்டு பள்ளிக்கூடங்களில் பைபில் என்னும் வேதாகமங்களை வழங்கச் செய்யவேண்டுமென்று கருத்துக்கொண்டிருக்கிறாரென்று பங்காளத்துப் பத்திரிகையினால் அறிந்து சந்தோஷப்படுகிறோம். ஏனென்றால், நல்லொழுக்கமானது கிறிஸ்து வேதத்திலே மாத்திரம் இருக்கிறதே ஒழிய மற்றொரு வேதத்திலேயுங் கிடையாதென்று நாங்கள் அறிந்திருக்கின்றமையால், அந்த வேதத்தைச் சிறுவருடைய புத்தியிலே பதியவைத்தால் அவர்கள் வளரவளர நல்லொழுக்கமும அவர்களோடு கூடவளர்ந்துவருமென்பதற்குச் சந்தேகமில்லை.

### HUMAN SACRIFICE—நரபெலி.

கூண்டலஸ் என்னும் ஊரிலே மாரியம்மன் பூசைக்கு நரபெலிசெலுத்துகிறார்கள் என்று பங்காளத்துக்கவர்னமெண்டார் அறிந்து அப்படிச் செய்கிறவர்களைப் பிடித்துத் தண்டிக்கும்படிக்குப் படை மைக்பெர்சன் என்னும ஆபிஸரையும் அவரோடேகூடச் சிலவீரரையும் அனுப்பியிருக்கிறார்கள் —அருணோதயம், உகம். இல.

---

### தாரகைக்குக் கடிதமெழுதுபவர்களுக்கு.

உதயதாரகையில் இரண்டு மூன்று சஞ்சிகைகளை நிரப்பத்தக்க போதுமான கடிதங்களெங்கள் கையிலிப்பொழுதிருக்கின்றன. அவைகளெல்லாவற்றையும் பிரசுரஞ்செய்வது தகுதியன்று. ஆகையால் அவைகளிற் சிலவற்றை இப்பொழுது பிரசுரஞ்செய்யத் தெரிந்தெடுத்துக்கொண்டு மற்றவைகளை இனிமேலிடங்கண்டபோது அச்சிற் பதிக்கும்படி வைப்பது திறமென்று காணுகிறது. ஆகையால வண்ணார்பண்ணையில் வாசம்பண்ணும் எமது சிநேகிதர் தாங்கள் பிரசித்தஞ்செய்வோமென முன்னொரு தினம் வாக்குப்பண்ணியிருந்த சந்திரனைக் கிளம்பப்பண்ணி எங்களுக்கனுப்பப்படுங் கடிதங்கள் சிலவற்றிற் கிந்த இடமவிடுத்தால அதிக நலமாயிருக்குமென்று நம்புகிறோம.

---

### TO CORRESPONDENTS.

We have on hand communications enough to fill 2 or 3 entire Nos. of the Star. It is of course entirely out of the question to publish them all. We do not know what better we can do than to make the best selections from them we can and reserve the rest till we have room for them. We wish our Wannerponna friends would cause their promised "*Moon*" to rise and thus afford space for a portion of our Correspondents favors.

---

*Tolls and Toll Collectors.*—We have heard lately of several instances of Toll Collectors in this vicinity enfringing on the Government ordinance by demanding of foot passengers when passing with a load, a *half pence* instead of *a pice* as required by the Ordinance.

We trust the publication of the following abstract of the 4th, 5th, 6th, 7th and 8th sections of the Ordinance respecting Tolls will have the effect to put both Toll Collectors and passengers on their guard against violating its provisions.

4. "*No toll* shall be leived upon any passenger, cart, carriage, animal or goods," returning through "any place at which he, it or they shall have paid toll on the *same day* (to be computed from 12 o'clock at night, to 12 o'clock of the succeeding night.") *One half* only of the appointed toll shall be leived, on a party's passing any place the 2d time, in the *like direction*, on the *same day*, with the *same load*.

5. "Every party having once paid toll at any station, payment at which shall have been declared by the Governor by advertisement in the Gazette to clear any other station, shall on the production at such other station of a Ticket denoting such payment to have been made, pass through the same without any additional payment of Toll."

6. "Every person appointed to collect Tolls at any station, shall be provided with Tickets consecutively numbered denoting the payment of the Toll, and mentioning the stations cleared by the payment of Tolls at such station, one of which Tickets, duly signed by him, shall be delivered gratis to the person paying the Toll, and which also shall have printed or written thereon the day on which the same is delivered; and every such Ticket shall be in the *English and in the Native languages*, and in the form hereunto annexed."

"And there shall be suspended in the front, or some other conspicuous place at every Toll station, so as to be distinctly legible from the road a table in the English and in the native languages, containing the name of the Toll station with the List of the Tolls payable at such station, and the name of every other station cleared by the payment of Toll at such station."

7. "If any person appointed to collect Tolls as aforesaid, shall at any time omit to suspend such Table or shall wilfully remove, conceal, alter or deface the same, or permit it to become illegible,

"Or shall demand or take a greater or less Toll than he shall be authorized to do by virtue of the provisions of this Ordinance, or shall fail to grant to any person having paid Toll, a Ticket denoting such payment as herein before required,

"Or shall wilfully subject any passenger, cart, carriage, animal or goods to unreasonable delay or detention, such person shall be guilty of an offence and be liable on conviction thereof, to a fine, not exceeding *five pounds*, one-half whereof shall be paid to the informer, and in default of payment, to imprisonment, with or without hard labour for a period not exceeding five months."

8. "If any person liable to payment of Toll on any road, shall pass from such road over any land near or adjoining thereto (not being a public high way) with intent to evade such payment,

"Or shall fraudulently, or forcibly pass by or through any Toll bar, station, or place duly appointed for the collection of Tolls,

"Or shall resist or make forcible opposition against any person, duly appointed to collect Tolls, in the execution of his office,

"Or if any person shall maliciously damage any bar, boat, bridge, or other thing employed for the purpose of collecting Tolls, or shall maliciously remove, deface, or alter, or damage any table of Tolls, suspended as herein before directed,

"Or if any person, other than a person duly appointed to collect Tolls, shall give, or if any person shall receive from any person, other than a person duly appointed as before said, or shall forge, counterfeit, or alter any Ticket or Certificate of payment or exception, with intent to evade the payment of any Toll,

"Or if any person shall do any other act whatsoever in order to evade the payment of any Toll, and whereby the same shall be evaded,

"Every such person shall be guilty of an offence, and shall be liable to such punishment as the Court, before whom such person shall be convicted, shall deem proportionate thereunto in addition to any civil action which may be brought against him by any party injured."

### CONTENTS.—அட்டவணை.


| | pages. | | |
|---|---|---|---|
| Life of Beschi - | 11 | வீரமாமுனிவர் சரித்திரம் | 13 |
| Selections from the Koran | 15 | கொரானாகமம் | 15 |
| Good's Book of Nature - | 16 | கூட்டென்பவர் செய்த பிரபஞ்ச நூல் | 16 |
| Abbot's Lessons on Morals | 17 | நன்மார்க்கநெறி | 17 |
| Principles of English Grammar | 18 | லின்லியம்லெனிலை என்ற துரை இங்கிலீசிற் செய்த இலக்கணச்சாரம் | 18 |
| Rules for Christian Conduct | 19 | ஆயுவின்மை இலட்சணம் | 19 |
| Scriptural Proofs - - | ib. | | |
| Pancha-Tantra-Katei - | 20 | பஞ்சதந்திரக் கதை | 20 |
| Cural - | ib. | குறள்-பஞ்சாங்கம் | ib. |
| Panchangam - - | ib. | | |
| Communication - - | 21 | கடிதம் | 21 |
| Summary of News - | 28 | புதினச் சங்கதிகள் | 23 |


Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.

Digitized by Google